உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—உஎ.] சுக்கில ௵ சித்திரை ௴ [பகுதி—௬.

Vol. XXVII. *April-May-1929.* No. 6.

பண்டைத்தமிழரின் இசையும் இசைக்கருவிகளும்.

[இது, சென்ற மேமாதம் 16-ம் தேதியன்று மாலை சென்னையில் கோடைக்கால இந்தியசங்கீதப்பள்ளிக்கூடத்தின் ஆதரவில் ஒய். எம். ஸி. ஏ. கட்டிடத்தில் மஹாமஹோபாத்யாய ப்ருமஸ்ரீ உ. வே. சாமிநாதையர்வர்கள் செய்த பிரசங்கத்தின் சாரமாகச் சுதேசமித்திரனிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது.]

"சகோதரிகளே! அன்பர்களே! இன்று உங்கள் முன்னிலையில்
பண்டைத்தமிழரின் இசையைக்குறித்துப் பேசவேண்டுமென்று தமிழி
லும் சங்கீதத்திலும் பயிற்சியும் ஆர்வமுமுடைய ரேவரெண்ட் பாப்ளி
துரையவர்கள் வற்புறுத்தினார்கள். இவ்விஷயத்தைப்பற்றிப்பேசுவது
மிக்க சிரமமென்று யாவரும் அறிவார்கள். சிலப்பதிகாரத்தைப் பதிப்
பிக்கும்பொழுது எனக்குக் கிடைத்த சிலகருவிகளைக்கொண்டு கூடிய
வரையிற் பரிசோதித்து இசைவிஷயங்களை உள்ளவாறே பதிப்பித்தேன்.
அப்பொழுது அவ்விஷயத்தில் நல்ல ஞாபகம் இருந்ததுண்டு. பின்பு
மேன்மேலும் ஆராய்ந்துவரும் பிற நூல் வேலைகளினாலும் கேட்பார்கள்
இன்மையினாலும் அவ்விஷயத்தின்தொடர்பு குறைந்திருக்கிறது. எனி
னும் சில விஷயங்களையேனும் உங்கள்முன்னிலையிற் சொல்லி என்
கடமையைச் செய்யலாம் என்று முன்வந்தேன்.

நான் இனிச் சொல்லப்போகும் விஷயங்களை ஐந்துபிரிவாகப்
பகுத்துக்கொள்ளுகிறேன். அவை இசையின்பெருமை, தமிழர்
இசை, இசைவகை, இசைக்கருவிகள், பிற்காலசங்கீதம் என்பனவாம்,

இசையின்பெருமை.

இசையினுடைய பெருமையை ஓர்ந்தே முத்தமிழுள் இசைத் தமிழை நடுநாயகமாக வைத்திருக்கிறார்கள். இயற்றமிழாகிய இலக்கிய நூல்கள் செய்யுட்களாலியன்றன. அவை இசையுடனேயே பயிலப் படவேண்டும். நாடகத்திற்கு இசை இன்றியமையாததென்பதை யாவரும் அறிவர். இலக்கிய இலக்கணப்பயிற்சி ஆங்கிலம் தெலுங்கு முதலிய பாஷைப்பயிற்சி முதலியன உடையாரால் அவ்வக்கலைகளில் அறிவுடையாரையே இன்புறுத்தமுடியும். ஆனால் இசையோ கற்றார், கல்லார், விலங்கினங்கள், பறவைகள் முதலிய எல்லா உயிர்க்கும் இன்பம் நல்கும். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இருதிணை யுயிர்களும் இசையின்வயப்பட்டுநின்றனவென்று பல இடங்களிற் கூறப்பட்டுள்ளன.

காட்டிலுள்ள புஷ்பங்கள் மலரும்பருவத்தில் வண்டுகள் சென்று அவற்றிலிருந்து ஊதும். மலரும் பருவத்திலிருக்கும் போரும்பு 'போது' என்று தமிழிற்கூறப்படும். காட்டிலுள்ள முனிவர் முதலிய வர்களும் பிறரும் சிலசில போதுகள் மலர்வதாற் காலத்தை யறிந்து வந்தனர். நள்ளிருள்நாறி யென் றொரு மலர் உண்டு. அது நடு யாமத்திற்றான் மலரும். சூரியன் மறைந்திருப்பினும் அவை மலர்த லாலும் குவிதலாலும் போதினைப் புலப்படுத்துதலின் போதெனப் பெயர்பெற்றன. அப்போதுகளில் வண்டுகள் இசைபாட அவை மலரும்; 'முல்லை, வரிவண்டூத வாய்நெகிழ்ந்தனவே' என்பது குறுந் தொகை. பாம்பு இசைக்கு அடங்கும் என்றும் கூறப்படுகிறது. மதம் பிடித்தலையும் யானைகளும் இசையினால் அடங்கிவிடும்; பரிக்கோல், குத்துக்கோல் முதலிய ஆயுதங்களாலும் அடக்கமுடியாத ஒரு யானை வீணையிசைக்கு அடங்கிவிடுவது உவமானமாகக் "யாழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல் யாழ்வரைத்தங்கியாங்கு" எனக் கலித்தொகை யென்ற சங்கநூலிற் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் "அணியிழை மகளிரும் யானையும் வணக்கும், மணி யொலி வீணையும்" என்று பெருங் கதையிலும், "மகரயாழ் வல்ல மைந்த னொருவனைக் கண்ட மத்தப், புகர் முகக் களிற்றின்" என்று மேருமந்தரபுராணத்திலும் சொல்லப்பட்டிருக் கின்றது. அகநானூற்றில் குறிஞ்சிநிலத்தில் தினைக்கொல்லையைக் காக்கும் ஒருபெண் தெள்ளிய சுனையில் நீராடிப் பாறையின்மேல்

நின்று இனிய காற்றில் தன் கூந்தலை ஆற்றிக்கொண்டு மிகுந்த களிப்புடன் அந்நிலத்துக்குரிய குறிஞ்சிப்பண்ணைப் பாடிக்கொண்டு நிற்கையில் தினைக்கதிரை யுண்பதற்காக அங்கேவந்த யானையொன்று அந்தப்பெண்ணின் இசையில் மயங்கிக் கதிரையுண்ணமல் தான் கொண்ட பெரும்பசியையும் மறந்து மயங்கிநின்றதாக ஒரு செய்தி காணப்படுகின்றது. இந்தக் காட்சியையே,

"ஒலியல் வார்மயி ருளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மரம்புகன் மழகளி றுறங்கும் நாடன்"

என்ற அடிகள் காட்டுகின்றன.

உதயணன்சரித்திரமாகிய பெருங்கதையில், உதயணன் நளகிரி யென்ற மதம்பிடித்தயானையை வீணைவாசித்து அடக்கி அதன்மேல் ஏறி ஆயுதங்களை அதையே எடுத்துத்தா ஏவி ஊர்ந்தானென்று ஒரு செய்தி காணப்படுகிறது. இசையினல் வணக்கப்பட்ட அந்த யானை உதயணனுக்கு அடங்கிநின்றதை ஆசிரியர் கூறுகையில் 'குருவினிடத்து மிகுந்தபக்தியுள்ள ஒரு சிஷ்யன்போல யானை படிந்தது' என்னும் பொருள்பட "வீணை கெழீஇ வீதியி னடப்ப, ஆணை யாசாற் கடியுறை செய்பு, மாணி போல மதக்களிறு படிய" என்று பாடியுள்ளார். இதேநிகழ்ச்சியைக் கூறும் 'உதயணகுமாரகாவியம்' செய்தவர் இங்கே தந்தையைக் கண்டு வணங்கும் ஓர்உத்தமபுத்திரனை உவமைகாட்டுகிறார்.

பசுக்கள் இசையின்வயப்படுகின்றன என்பதைக் கண்ணன் கதை விளக்கும். பசுக்களைப் பல இடங்களிலும் மேயவிட்டு விளையாடிக்கொண்டிருந்த கண்ணபிரான் மாலைக்காலத்திற் பசுக்களை ஆயர்பாடிக்கு ஓட்டிச்செல்ல வேறு எதும் செய்வதில்லை. குழலை யெடுத்து ஊதுவார், உடனே பல இடங்களிலும்நின்று மேய்ந்தபசுக்க ளெல்லாம் ஒருங்கே திரண்டு கண்ணன்பால் வந்து சேரும். இதனையே "ஆக்குவித்தார்குழலாலாங்கேசர்" என்று திவ்யகவி ஒருவர் சுருக்கமாக விளக்குகின்றார். பெரியபுராணத்திற்கூறப்படும் நாயனமார்களுள் ஆனய நாயனருடையபுராணத்தும் இத்தகையசெய்திகள் காணப்படுகின்றன.

அசுணமா வென்பதொரு விலங்குண்டு. அதைப் பறவை யென்பாருமுளர். அது இசையை யறிவதிற் சிறந்தது. இனிய இசையைகேட்டுக் களிக்கும். இன்னாவிசையைக் கேட்பின் மூர்ச்சை யுற்று விழுந்துவிடும். அதன் தன்மையை "இருஞ்சிறைத் தொழுதி யார்ப்பயாழ் செத்து, இருங்கல் விடரளை யசுண மோர்க்கும்" என்ற அகநானூற்றடிகளாலும், "இன்னளிக்குரல் கேட்டவசுணமா, வன்ன ளாய் மகிழ்வெய்துவித்தாள்" என்ற சிந்தாமணிப் பாட்டாலும், "யாழ் நறை யடுத்த வசுணநன்மாச் செவிப், பறையடித்தது போலும்" என்ற கம்பர்வாக்காலும் அறியலாம். அதனைப் பிடிக்கவெண்ணினவர்கள் செடிமறைவிலிருந்து யாழ்வாசிப்பார்களென்றும் அதன் இசையைக் கேட்டு அருகுற்று அசுணம் களிக்குமென்றும் அப்பொழுது அதனைப் பிடித்துக்கொள்வார்களென்றும் தெரிகிறது. அவர்கள் கை முதலில் யாழின் இசையால் அசுணத்திற்கு இன்பத்தை விளைவித்துப் பின்பு அதன் உயிருக்கே அழிவு சூழ்வதை நற்றிணையில் உவமையாக எடுத்தாள்கையில் "அசுணம் கொல்பவர் கைபோ னன்றும், இன்பமுந் துன்பமு முடைத்தே" என்று ஒரு நல்லிசைப் புலவர் பாடியிருக்கிறார்.

கின்னரப்பறவையும் இத்தன்மையதே. வண்டிமாடு, ஏற்றக் காளைகள் முதலியவற்றை இயக்கும்பொழுது தெம்மாங்கு முதலிய பாடல்களைப் பாடுவதையும் அவைகளைக் கேட்டு அவ்விலங்குகள் தம் வேலையை வருத்தமின்றி அமைதியாகச் செய்துவருவதையும் இன்றும் காண்கிறோம். அந்தத் தெம்மாங்கு தேன்பாங்கு போலும். குழந்தை கள் அன்னையின் இனிய தாலாட்டிசையைக் கேட்டு அழுகையோய்ந்து உறங்குவதை எவர்தாம் அறியார்?

வன்மனக்கள்வரும் தம் கொடுஞ்செயலைமறந்து இசைவயத்தாவர். பழையநூலில் இத்தகையசெய்தியொன்று காணப்படுகிறது. பாலைநிலத்தில் ஆறலைகள்வர் வழிவருவோர்பொருளையும் உயிரையும் கவர்வார்; பொருளில்லையெனினும் வாளால்வெட்டப்பட்ட உடம்பு துள்ளுவதைப் பார்த்தேனும் களிக்கக் கொலைசெய்வர். அவர்முன் பொருநர்கள் பாலைப் பண்ணைப்பாடினால் அக்கள்வர் தங்கையிலுள்ள ஆயுதங்களைநழுவவிட்டுத் தங்கள் வன்றொழிலை மறந்து அன்புற்று இசைக்கு உருகுவார்களாம். இதனையே "ஆறலை கள்வர் படைவிட வருளின், மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை" என்ற அடிகள் உணர்த்துகின்றன.

சீவகசிந்தாமணியின் கதாநாயகனுன சீவகன் ஆண்களைப் பார்ப்பதுமில்லை யென்ற விரதத்துடன் இருந்த சுரமஞ்சரி என்ற பெண்ணின்பால் ஒரு பழுத்த கிழவன்வேடங்கொண்டுசென்று இசைபாடி அவளை வசப்படுத்தினன். அவன் இசையைக் கேட்ட பெண்கள் யாவரும் வேடன் பறவைபோற்கத்தும் ஓசையைக்கேட்டு மயங்கி ஒரே கூட்டமாக ஓடிவரும் மயிலினங்களைப்போல விரைந்துவந்தனர் என்று கவி அவ்விடத்தில் வருணிக்கிறர் ;

"கள்ள மூப்பி னந்தணன் கனிந்த கீத வீதியே
வள்ளி வென்ற நுண்ணிடை மழை மலர்த் தடங்கணர்
புள்ளு வம்ம திம்மகன் புணர்த்த வோசை மேற்புகன்
றுள்ளம் வைத்த மாமயிற் குழாத்தி னேடி யெய்தினர் "

என்பது அந்தப் பாட்டு.

இசை பிறரைத் தன்வயப்படுத்தும் என்னும்போது என்னுடைய இளமைக்காலத்தில் நடந்த ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. என்னுடைய தமிழாசிரியராகிய திரிசிரபுரம் மகாவித்வான் மீனுக்ஷி சுந்தரம்பிள்ளையவர்களிடத்துச் சிறப்புப்பாயிரம் பெறப் பல புலவர்கள் முயற்சிசெய்வதுண்டு. சிறந்தசங்கீதவித்வானும் மிக்கசிவபக்தரும் ஆகிய கோபாலகிருஷ்ணபாரதியவர்கள் தாம் இயற்றிய நந்தன்சரித்திரக் கீர்த்தனத்திற்குச் சிறப்புப்பாயிரம் கொடுத்துதவுமாறு பிள்ளையவர்களை வேண்டினர்கள். அதிற் பிழைகள் காணப்பட்டமையாற் சிறப்புப்பாயிரம் தரமாட்டேனென்று பிள்ளையவர்கள் மறுத்துவிட்டார்கள். மறுத்தும் பாரதியார் முயன்றேவந்தார். ஒருநாள் பிள்ளையவர்கள் உள்ளே படுத்திருக்கும்போது அவர்கள் வீட்டிற்குவந்த பாரதியவர்கள் பிள்ளையவர்கள் நித்திரைசெய்கிறர்களென்பதை யறிந்து எழுப்புதல்கூடாதென்றெண்ணிப் புறத்தேயிருந்து தமது நந்தன்சரித்திரக்கீர்த்தனையிலுள்ள "கனகசபாபதி தரிசனம் ஒருநாள் கண்டாற் கலிதீரும்" என்ற கீர்த்தனையை இனிமையாக மெல்லப் பாடிக்கொண்டிருந்தார்கள். பிள்ளையவர்கள் விழித்துக்கொண்டு எழுந்து கீர்த்தனைமுழுவதும் பாடும்வரையில் இருந்துகேட்டு மனமுருகி "இதற்குச் சிறப்புப்பாயிரம் கொடாமலிருப்பது முறையன்று" என்று உடனே வந்து சிறப்புப்பாயிரமொன்றை வழங்கினர்கள்.

ஈசுவரனே இசையின் வடிவமாயிருப்பவரென்றும் இசையிற் பிரியம் உடையவரென்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். "ஏழிசையா யிசைப்பயனாய்", "இயலவன் இசையவன்", "இயலிசைப் பொருள்களாகி", "ஏழிசையை" என வரும் தேவாரப்பகுதிகள் பரம சிவன் இசையுருவினரென்பதைத் தெரிவிக்கின்றன. இசையிலுள்ள விருப்பத்தினால் அனவரதமும் இசையைக்கேட்டு ஆனந்திக்கும்பொருட் டுக் கம்பளர் அசுவதரர் என்ற இசையில்வல்ல இரண்டு கந்தருவர்களைச் சிவபெருமான் காதிற் குழைபாக வைத்தருளியிருக்கின்றனரென்று நூல் கள் கூறும். "இசைவிரும்பும் கூத்தனார்" என்பதும் இறைவனுடைய இசைவிருப்பத்தை வெளியிடும். ஈசுவரன் கையில் வீணையைவைத்து வாசித்தின்புறுவதாகப் பெரியோர் கூறுவர்; "எம்மிறை வீணை வாசிக் குமே" என்பது தேவாரம். இத்தகைய மூர்த்தி "வீணாதக்ஷிணா மூர்த்தி" என்று வணங்கப்படுவார். கண்ணன் வேய்ங்குழலோடும் விளங்கி இசைபரப்பியதை அறியாதார் யார்? கடவுளாலேயே விரும் பப்படுவது இசை யென்பதை இன்னும் விரிக்கிற் பெருகும்.

இசை கடவுளுக்கு விருப்பமாவதறிந்து பல தொண்டர்கள் இசை யாலேயே இறைவனை வழிபட்டிருக்கின்றார்கள். நாயன்மார்களுள் ஆனாயநாயனார், திருநாளைப்போவார், திருநீலகண்டயாழ்ப்பாணர், பர மனையே பாடுவார் முதலியவர்கள் இசையால் வழிபட்டுப் பேறுபெற் றார்கள். ஆனாயநாயனார் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைக் குழலில் இசைத் துதி வழிபட்டார். மதுரையில் பாணபத்திரரென்னும் அடியார் யாழ் வாசித்துச் சிவபெருமானை வணங்கிவந்தார். அவருக்காகச் சோமசுந் தரக்கடவுள் விறகுசுமந்து இசைபாடி அவருடைய எதிரியைப் பயந் தோடச் செய்தார். திருமாலடியார்களுள்ளும் திருப்பாணாழ்வார், நம் பாடுவான் முதலியோர் இசைபாடித் திருமாலை வழிபட்டவர்கள். இன்ன வகையார் இன்னும் பலருளர். கடவுளைத் துதிக்கும் தோத்திரங்க ளெல்லாம் இசைப்பாட்டாக அமைந்து விளங்குதல் கடவுளுக்கு இசை யிலுள்ள விருப்பத்தை விளக்குமன்றோ? தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகளும், திவ்யப் பிரபந்தமும், திருப்புகழும், தத்துவராயர் பாடுதுறை முதலியனவும் இசைப்பாட்டுக்களாலாகிய நூல்களே. தேவா ரங்களின் பண்கள் முன் கூறப்பட்ட திருநீலகண்டயாழ்ப்பாணர்பரம் பரையில்வந்த ஒருவரால் அமைக்கப்பட்டன. அதுபோலவே திவ்யப்

பிரபந்தத்திற்கும் பண்கள் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். இவற்றைத் தெரிவிக்கும் நூல் தேவகானமென்பர். எல்லாரும் அனுசந்திக்க இயலுமாறு ஒருவித இசையுடன் இப்பொழுது பயிலப்பட்டுவரினும் திவ்யப் பிரபந்தத்தில் ஒவ்வொரு பதிகத்திற்குமுரிய பண்கள் முன்பு அமைந்திருந்திருக்கவேண்டும். இப்பொழுது பதிப்பிக்கப்பட்டுள்ள திவ்யப்பிரபந்தப் புத்தகங்களிற் பலவிதராகங்களைப் பொருத்தமின்றிப்பிணைத்திருக்கின்றார்கள். ஒரே பதிகத்தில் ஒவ்வொருபாட்டிற்கும் தனித்தனி இராகங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு இருப்பது முறையன்று.

இதுகாறுங்கூறியவை இசையின்பெருமையைநன்குபுலப்படுத்தும். இனித் தமிழர் இசையை எவ்வாறுவளர்த்தனர் என்பதை ஆராய்வோம்.

தமிழர் இசை.

பழையகாலத்தில் தமிழ்ச்சங்கங்களில் மூன்றுதமிழையும் ஆய்ந்து வந்தார்கள். இசைத்தமிழாராய்ச்சியும் இசைப் பயிற்சியும் அப்பொழுது ஏனைய இயல் நாடகங்கள்போல மிகச் சிறந்துவிளங்கின. இசைத்தமிழ்ச்சங்கங்களே தனியாக அமைக்கப்பட்டுப் பல இசைவல்லார்கள் இசைத்தமிழை வளர்த்துவருவதற்கு நிலைக்களனாக இருந்தனவென்று தெரியவருகிறது; "ஏழிசைச்சூழல் புக்கோ" என்று வரும் திருச்சிற்றம்பலக்கோவையாரால் இசைச்சங்கங்களும் இருந்தனவென்பதனை அறியலாம். கடைச்சங்கத்துப்புலவர்களுள்ளும் இசையையே சிறப்பாகப் பயின்று ஆராய்ந்து நூல்கள் இயற்றிய புலவர்களும் இருந்தார்கள். அவர்கள் கண்ணகனார், கண்ணனாகனார், கேசவனார், நந்நாகனார், நல்லச்சுதனார், நன்னாகனார், நாகனார், பித்தாமத்தர், பெட்டகனார், மருத்துவனல்லச்சுதனார் முதலியோர். இவர்களையன்றி நெடும்பல்லியத்தனார் என்று ஒருவர் இருந்தார். அவர் பல வாத்தியங்களிலும் பயிற்சியுடையவராதல்பற்றி அப்பெயர் பெற்றார்போலும். அவர் பாட்டிற் பல வாத்தியங்களின்பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தச் சமயத்தில் புதுக்கோட்டைத் தசவாத்தியம் கிருஷ்ணையர் என்ற ஒரு சங்கீதவித்வானுடைய ஞாபகம் வருகிறது. அவர் பத்துவாத்தியங்களை வாசிப்பதில் வல்லவர். கூடாரம்போல் ஓர் இடம் அமைத்து அதில் இருந்துகொண்டு சுற்றிலும் பல வாத்தியங்களைவைத்து வாசிப்பார்.

இனி, கடைச்சங்ககாலத்தில் இருந்த இசைத்தமிழிலக்கண இலக்கிய நூல்கள் பல. இப்பொழுது சிலப்பதிகார உரைகளே அந்த நூல்களின் பெயரையும் அவற்றிற் சிலவற்றிலிருந்து சில பகுதிகளையும் தெரிவிக்கின்றனவேயன்றி அந்நூல்கள் அகப்படவில்லை. அந்தச் சிலப்பதிகாரத்தால் தெரிந்த இசைத்தமிழ் இலக்கணநூல்கள் பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இசைநுணுக்கம், பஞ்சமரபு, தாளசமுத்திரம், சச்சபுடவெண்பா, இந்திரகாளியம், பதினறுபடலம், தாளவகையோத்து, இசைத்தமிழ்ச் செய்யுட்டுறைக்கோவை முதலியன. பிற்காலத்தில் எழுந்த சுத்தாநந்தப்பிரகாசம் முதலிய சில நூல்களும் இசையிலக்கணத்தைக் கூறுவனவே. பழைய இசைத்தமிழிலக்கியங்கள் சிலப்பதிகாரம், கலித்தொகை, பரிபாடல் முதலியனவாம். சிலப்பதிகாரம், இலக்கணங்களையும் கூறும். சீவகசிந்தாமணி, சூளாமணி, கல்லாடம், திருவாலவாயுடையார்திருவிளையாடற்புராணம், திருவிளையாடற்புராணம், அதிவீரராமபாண்டியரியற்றிய நூல்கள் முதலிய பிற்கால நூல்களிலும் இசைத்தமிழிலக்கணவமைதி காணப்படுகிறது.

குறவஞ்சி, பள்ளு, சிந்து, முதலிய பிற்காலப் பிரபந்தங்களும் இசையைச் சேர்ந்தனவே.

இசைத்தமிழிலக்கணநூல்கள் இவ்வளவு இருந்தனவென்பதனால் அக்காலத்தில் இருந்த இசையமைப்பின் விரிவு உணரப்படும். சிலப்பதிகாரமுதலிய நூல்களாலிசையைப்பற்றித்தெரிந்தவற்றிற் சிலகூறுவேன்.

இசைவகை.

இசையில் பண்களென்றும் திறங்களென்றும் இருவகை உண்டு. பண்கள் ஏழு நரம்புகளுங்கொண்டன. நரம்பு என்பது இங்கே ஸ்வரம். ஏழு ஸ்வரமுங்கொண்டவை சம்பூர்ண ராகம். அதுவே பண்ணும். வடமொழியில் மேளகர்த்தாவென்று கூறப்படுவதும் அஃதே. ஏழு ஸ்வரங்கள் வடமொழியில் ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்று கூறப்படும். அவற்றையே தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என வழங்குவர். யாவருக்கும் இயல்பான குரல் ஷட்ஜம் ஆகும். அதனைக் குரலென்றே வழங்கிய பெயரமைதி வியக்கற்பாலது. ஏழு ஸ்வரங்களுக்கும் ச, ரி, க, ம, ப, த, நி என்று இப்பொழுது

பயிலப்படும் எழுத்துக்களைப்போலவே தமிழ்முறையில் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழு நெடிலையும் ஸ்வரங்கட்கெழுத்துக்களாகக்கொண்டு பயின்றனர். இந்த ஏழு நரம்புகளும் நிறைந்த ராகம் பண்ணென்று முன்னரே சொன்னேன். ஜனகராகமென்பதும் அதுவே. அப்பண்களிலிருந்து திறங்கள் பிறக்கும். அவை இப்பொழுது ஜன்யராகங்களென்று வழங்கப்படும். "நிறைநரம்பிற்றே பண்ணெனலாகும், குறைநரம்பிற்றே திறமெனப்படுமே" என்ற திவாகர சூத்திரத்தால் பண்கள், திறங்கள் முதலியவற்றின் இலக்கணம் விளங்கும். பண்களுக்கு இனமாகத் திறங்கள்கூறப்படும். யாப்பிலக்கணத்தில்,

"பண்ணுந் திறமும்போற்பாவு மினமுமாய்
வண்ண விகற்ப வகைமையாற்—பண்ணின்
திறம்விளரிக் கில்லதுபோற் செப்ப லகவ
லிசைமருட்கு மில்லை யினம்"

என்று காணப்படும் இலக்கணத்தில் இது விளக்கப்பட்டிருத்தல்காண்க.

இப்படிப்பிறக்கும் பண்ணுந் திறமுமாம் இசைவகைகள் ஒருவழியிற் றொகுக்கப்பட்டு 11991 என்று கூறப்படுகின்றன.

பண்கள் பலவகைப்படும். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் எனப் பெரும்பண்கள் ஐந்து. இவைகளின் வகையாகும் பண்கள் பல. இவைகளுள் பகற்பண்கள் முதலியனவும், அவ்வப்பொழுதிற் கமைந்த பண்களும், யாமங்களுக்குரியனவும், சுவைகட்குரியனவும், வருணத்திற்குரியனவுமெனப் பலவகையுண்டு. புறநீர்மை முதலிய பன்னிரண்டுபண்கள் பகற்பண்களெனப்படும். தக்கராகமுதலிய ஒன்பது பண்களும் இராப்பண்களெனப்படும். செவ்வழிமுதல் மூன்றும் பொதுப்பண்களாம். காலைக்குரிய பண் மருதம். மாலைக்குரியது செவ்வழி என்பாரும் உளர். இந்தப் பண்களால் இசைவல்லோர்கள் சில குறிப்பினை யறிவிப்பதுண்டு. ஒருவர் தம் நண்பனை மாலையில் வரவேண்டி மாலைப்பண்ணைப்பாடினுரென்று ஓரிடத்திற் றெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இரங்கற்பண் விளரி. அதைப் பாடிப் பிறர்பால் இரக்கம் உண்டாக்கினுர்கள். பரமசிவனுற் கைலையின்கீழ் அமிழ்த்தப்பட்ட இராவணன் அவருக்கு இரக்கம் உண்டாக விளரியைப் பாடினுன் என்ற

பொருள்பட "விராய்மலர்ப்பூங் குழலிபங்கன் மகிழ்வினோங்கும் வெள்ளி மலைக் கீழ்க்கிடந்து விளரிபாடும், இராவணனார்" என்று ஒரு கவி பாடியுள்ளார். இச்செய்யுட்பகுதி விளரி இரங்கற்பண் என்பதை நன்கு தெரிவிப்பது காண்க.

இத்தகைய பண்களையமைத்துப் பாட்டுக்கள் செய்யப்பெறும். பொருட்கேற்றனவும், சுவைக்கேற்றனவுமாய பண்களையமைத்துப்பாடிய இசைப்பாட்டுக்களையே புலவர் பாடினர். பண்ணும் பாட்டும் இயைந்திருத்தல்வேண்டும்; "பண்ணென்னும் பாடற் கியைபின்றேல்" என்ற குறள் இதனை வலியுறுத்தும். பண்ணமைந்த இசைப்பாட்டுக்கள் உருக்கள் வரிகளெனக் கூறப்படும். இக்காலத்துக் கீர்த்தனங்களைக் குறிக்க வழங்கும் உருப்படிகள் என்றசொல் உரு என்ற பழைய வழக்கிவிருந்து வந்திருக்கவேண்டுமென்றே எண்ணுகிறேன். அவ்வுருக்கள் பத்துவகையென்று ஒருசாரார் பகர்வர். அவை செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல்வரி, விரிமுரண், தலைபோகுமண்டிலம் என்பனவாம். தாளக்கிரியையுடன் பொருந்தும் பாட்டுக்கள் ஒன்பதென்பர்; அவை சிந்து, திரிபதை, சவலை, சமபாதவிருத்தம், செந்துறை, வெண்டுறை பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, வண்ணமென்பனவாம்.

இவைகளையன்றி இசைப்பகுதியில் கந்தர்வமார்க்கமென்பதொன்றுண்டு, அது இடைமடக்காகப் பாடுவது. காந்தர்வசாஸ்திரமென்பது சங்கீதசாஸ்திரத்திற்குப் பெயர். பூலோக கந்தர்வ நாராயணசாமி ஐயர் என்றொரு பெரிய சங்கீதவித்துவான் இருந்தார். அவர் உடையார்பாளையத்திற்கு வந்தார், அக்காலத்து உடையார்பாளையம் ஸமஸ்தான ஜமீன்தாராகவிருந்த யுவரங்க னென்பவர் சங்கீதத்திற் சிறந்த பயிற்சியும், பிரியமும் உடையவர். யாராவது வித்துவான் வந்தால் அவருக்கு ஓர் இடத்தை ஏற்படுத்தி வேண்டிய சௌகரியங்களெல்லாம் அமைத்துப் பலநாளும் உயர்ந்த விருந்துணவுசெய்வித்து அவர்களாகக் களித்துப் பாடுங்கால் அதனை ஒற்றரால் அறிந்து சென்று கேட்டு மகிழ்வாராம். இந்த நாராயணசாமி ஐயருக்கும் அவ்வாறே வசதிகள் அமைக்கப்பட்டன. ஒருநாள் ஜமீன்தார் உத்தரவின்மேல் ஒருவர் சந்தனாதித்தைலங் கொண்டுவந்து இவரை இருக்கச்செய்து தேய்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுதுண்டான சுகத்தினாலும்

சிலநாளாகத் தாம் அங்கே அடைந்திருக்கும் சௌகரியக் களிப்பினு லும் தம்மையறியாமலே நாராயணசாமி ஐயர் பாட ஆரம்பித்தார். மிக்க மனோல்லாசத்துடன் பாடினாராகலின் அவர் பாடியது அவருக்கே இன் பத்தைத் தருவதாயிற்று. அப்பொழுது இடையில் "அடடா, இப் பொழுது யுவரங்கன் இந்தப்பாட்டைக் கேட்க இல்லையே" என்று சொல்லி வருத்தப்பட்டார். உடனே, அந்த முன்னரே இவர் பாடுவதை ஆட்கள் மூலம் அறிந்து வந்து மறைவிலிருந்து இந்தப் பாட்டைக் கேட்டு அளவற்ற இன்பத்திலாழ்ந்திருந்த யுவரங்கன் "இதோ கேட்டுக் கொண்டேயிருக்கிறேன்" என்று முன்வந்தார். நாராயணசாமி ஐயர் திடுக்கிட்டுப் பாடுவதற்கு ஏற்றவண்ணம் உடை முதலியன அணிந்து பின்னும் மனமாரப்பாடி இன்புறுத்தினர். அந்த யுவரங்கன் வியந்து காந் தருவர்களின் இசையையொத்துப் பாடின காரணம்பற்றி அவருக்குப் பூலோக கந்தருவ நாராயணசாமி ஐயரென்ற பட்டத்தையும் அளவற்ற பரிசுகளையும் அளித்தார். கந்தருவம் இசையென்றபொழுது இது ஞாபகம் வந்தது.

பாடுங்கால் இவ்விவ்விலக்கணங்களோடு பாடவேண்டும் என்ற விஷயங்களை மிக விரிவாக இசைநூல்கள் கூறும். குற்றம் சிலவகைப் படும்; இக்குற்றங்கள் பாடுவோர்பால் இருத்தல்கூடாவென விலக்கியும் நூல்கள் கூறும்.

"வயிறது குழிய வாங்க லமுழுகக் காட்டல் வாங்குஞ்
செயிரறு புருவ மேறல் சிரநடுக் குறல்கண் ணூடல்
பயிறரு மிடறு வீங்கல் பையென வாயங் காத்தல்
எயிறது காட்ட லின்ன வுடற்றொழிற் குற்ற மென்ப"

என்று திருவிளையாடற்புராணம் தெரிவிக்கின்றது. பெரியவித்து வான்கள்சிலரிடத்தும் இத்தகைய குற்றங்கள் காணப்படும்; காரணம் அவர்கள் தம்மைத் திருத்திக்கொள்ளாமையே. உதாரணமாக ஒரு நிகழ்ச்சியைச்சொல்லுவேன்.

சுமார் அறுபது வருஷங்களுக்குமுன் ஒரு ஸமஸ்தானத்தில் ஒரு விசேஷநாளில் பல கனவான்களும் உத்யோகஸ்தர்களும் ஆங்கிலேயர்க ளும் கூடியிருக்கும் சபையில் ஒரு பெரிய சங்கீதவித்வானை (அவர் பெயரைக்கூற அஞ்சுகிறேன்.) பாடும்படி செய்தார்கள். அவர் சங்கீதத்

தில் மிகப் பெயர்பெற்றவரே. ஆயினும் பாடுங்காலத்தில் தலையசைப்பதும் கைகளை நீட்டிப்பாடுவதும் பக்கத்திலிருப்பவர்கள்மேல் உற்சாகத்தில் அடித்தடித்துத் தாளம்போடுவதுமாகிய செயல்களிலும் பெயர்பெற்றவரே. அவர் பாடஆரம்பித்தால் அவருடைய அடிக்கு அஞ்சி ஒருவரும் அவர்பக்கத்தில் உட்காருவதில்லை. இத்தகைய சின்னங்களோடு பல பிரபுக்களின் முன்னிலையிலும் கலெக்ட்டர்கள் முன்னிலையிலும் ராஜசமூகத்திலும் பாடும் நிலையினுல் அளவற்ற உத்ஸாகங்கொண்டு பாடிக்கொண்டு வந்தார். அந்தச் சபையில் ஜில்லா ஸர்ஜன் வேலையிலிருந்த ஆங்கிலேயர் ஒருவர் பாடுபவருடைய புடைபெயர்ச்சி ஆட்டம் குடுமியவிழ்தல் முதலியவற்றைக் கூர்ந்து கவனித்துக்கொண்டேயிருந்து, அவர் பாடுகிருரென்பதையறியாமல், காக்கைவலிப்பு வந்துவிட்டதென்று நினைத்துத் திடீரென்று "இப்படியே விட்டிருந்தால் இன்னும் ஐந்தேநிமிஷத்தில் இம்மனிதன் இறந்துவிடுவான்" என்று ஆவேசத்தோடு கத்தினர். அப்புறம், அந்த வித்துவானுடைய பாடலை நிறுத்திவிடச்செய்து சித்திரம்போலிருந்து அசையாது பாடும் வன்மையுடைய ஸ்ரீவைகுண்டம் சுப்பையர் என்ற மற்றொரு பெரிய ஸங்கீதவித்வானைப் பாடச்சொல்லிக் கேட்டு இன்புற்ருர்கள். இஃது உண்மையில் நடைபெற்ற செய்தியே. பாடுங்கால் எழுதுசித்திரம் போல் இருந்து பாடுதலே சிறந்தது.

இனி அடுத்த பகுதியாகிய இசைக்கருவிகளைப்பற்றிப் பேசுவேன். நெடுநேரம் ஆகிவிட்டமையின் விஷயங்களைச் சுருக்கிக்கொள்கிறேன்.

இசைக்கருவிகள்.

இசைக்கருவிகள் கீதாங்கம், நிருத்தாங்கம், உபயாங்கம் என மூவகைப்படும். பாடும்பொழுதுமட்டும் கோடற்குரியன கீதாங்க வாத்தியங்கள். நிருத்தாங்கம் நாடகத்திற்குரியன. இரண்டிலும் பயன்படுவன உபயாங்கமாம். எல்லா வாத்தியங்களுள்ளும் குழலையே முன்னதாகக் கூறியிருக்கிருர்கள். ஏனெனில் அது இயற்கையை அனுசரித்துச் செய்யப்பட்டது. காட்டில் வளர்ந்திருக்கும் மூங்கில்களில் வண்டுகள் துளைத்த துளைகளின்வழியே காற்று வீசும்பொழுது இனிய ஓசை பெழும். அதைக்கேட்டே குழலையமைத்தார்கள். இயற்கையில் மூங்கிலில் எழுந்த அந்த இனிய ஓசையைப்பற்றி அகநானூற்றிற்காணப்படும்,

"ஆடமைக் குயின்ற வவிர்துளை மருங்கிற்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் னருவிப் பனிநீ ரின்னிசைத்
தோடமை முழவின் றுதை குரலாக"

என்றஅடிகள் விளக்குகின்றன. புல்லாங்குழலெனும்பெயர் அது மூங்கிலாற் செய்யப்பட்டமையா லேற்பட்டது. சிலர் சிறுவர்கள் விளையாடும் கிட்டுப்புள்போன்றிருப்பதால் புள்ளாங்குழலென்ற பெயரமைந்தது என்பர்; அது பொருந்தாது. 'புறக்காழெல்லாம்புல்லெனப்படுமே' என்றசூத்திரத்தின்படி மூங்கில் முதலியபுறவயிரமுடையமரங்கள் புல்லெனப்படும். எனவே மூங்கிலாற் செய்யப்பட்டமை காரணமாகப் புல்லாங்குழலென்னும் பெயரேற்பட்டதென்பதே அமைந்ததாம். வங்கியம் என்றும் குழலுக்கு ஒருபெயர் சொல்லப்படும். அது வம்சமென்பதின் திரிபு. வம்சமென்பது மூங்கிலைக்குறிக்கும் வடமொழிப்பெயர்.

இயற்கைவழியறிந்தமைத்ததுபற்றிக் குழலே முதல் இசைக்கருவியாயிற்று.

"குழல்வழி நின்ற தியாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந் திரிகை"

என்று சிலப்பதிகார அடிகளில் இசைக்கருவிகள் முறையாகக் கூறப்பட்டிருக்கின்றன. "குழலினிது யாழினிதென்ப" என்னும் குறளிலும் குழல் முன்வைக்கப்பட்டிருத்தல் காண்க.

குழல்வகை பல. கொன்றையங்குழல், ஆம்பலந் தீங்குழல், முல்லையங்குழல் முதலியன பல இலக்கியங்களிற் சொல்லப்படுகின்றன. குழலின் இலக்கணங்களை விரிவாக நூல்களிற் காணலாம்.

இப்படியே யாழ்வகைகளும் பல உண்டு. யாழ்வேறு, வீணைவேறு. பேரியாழ் என்பதொன்றுண்டு. அது இருபத்தொருநரம்புகளையுடையதென்பர். பத்தொன்பது நரம்புகளையுடைய மகரயாழ் என்பதொன்றும், பதினான்கு நரம்புகளையுடைய சகோடயாழ் என்பதொன்றும் இசைநூல்களிற் கூறப்பட்டுள்ளன. செங்கோட்டியாழென்பதொன்று ஏழு நரம்புகளை யுடையதாம். ஆயிரம் நரம்புகொண்ட ஆதியாழ் பெருங்கலமென்றும் பெயர்கொண்ட ஒன்றிருந்ததென்பர்.

நரம்புகளின் குணங்கள் குற்றங்கள் முதலியனவும் இலக்கணங்களிற் கூறப்பட்டுள்ளன.

தண்ணுமைவகைகளும் பல. பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, காடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திர வளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுமை, சிறு பறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப் பறை முதலிய தோற்கருவிகளின் பெயர்கள் நூல்களிற் காணப்படுகின்றன. மத்தென்ற ஓசையை யெழுப்புதலின் ஒரு வாத்தியம் மத்தளம் எனப்பட்டது. காடியின் முழக்கம்போன்று சப்திப்பதால் ஒன்று காடிகை எனப்பட்டது. இப்படியே வாத்தியங்களின் பெயர்க்குக் காரணம் அமைந்திருக்கின்றது.

இதுகாறும் கூறிவந்த இசைக்கருவிகளை யன்றி வேறு பல கருவிகளும் ஆங்காங்கே கூறப்படுகின்றன. அவை ஆகுளி, பாண்டில், கோடு, நெடுவங்கியம், குறுந்தூம்பு, தட்டைப் பறை, பதலை முதலியன பல.

இந்த இசைக்கருவிகளோடும் இசையைப் பரம்பரையாகவே பயின்று அரசர்கள் பிரபுக்கள் முதலியவர்களிடம் சென்று தம்முடைய இசை வன்மையைக் காட்டிப் பரிசுபெற்றுவரும் சாதியார் சிலர் இருந்தனர். பெரும்பாணர், சிறுபாணர், பொருநர், கூத்தர் முதலியோர் அத்தகையவர்களே. மலைபடுகடாம் என்ற நூலில் அவர்கள் பலவாத்தியங்களையும் பலாமரத்திற் பல காய்கள் தொங்குவதுபோற் றோன்றும்படி பின்னும் முன்னும் சுமந்துகொண்டுசென்றதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

நேரம் மிகுதியாக ஆய்விட்டமையால் நான் பேசவேண்டிய ஏனைய விஷயங்களை நிறுத்திக்கொள்ளுகிறேன். திருவருள்கூட்டுமாயின் மற்றொருசமயம் அவைகளைப்பற்றிச் சொல்லுவேன். என்னை ஒருபொருளாக நினைத்து மிக்க அன்புடன் வற்புறுத்தி இங்குவந்து பேசுமாறு செய்து நான் மறந்துபோனவிஷயங்களை ஞாபகப்படுத்திக்கொள்ளச் சந்தர்ப்பம் அளித்த பாப்ளிதுரையவர்களுக்கு என் நன்றியறிவை வெளிப்படுத்துகிறேன்.”

ஸ்ரீ:

குருபரம்பரை.

எம்பெருமானார்வைபவம்.

—(o)—

[௧௮௮-ம் பக்கத் தொடர்ச்சி.]

தடையறவந்தசேனைத்தலைவர்களிருவர்தம்மைக்
கடையரிற்கடையனானகாவலன்முன்னேவிட்டோர்
புடையுறவணங்கிநின்றார்பூபதியவரைநோக்கி
யுடையவரெங்கேயென்றான்கண்டிலோமொளித்தாரென்றார். (௮௰)

அவரெழுத்துறுநாளன்றேவரான்பரமாவதன்றி
யிவரெழுத்தாலிங்கென்னுமென்றனன்மன்னன்மாட்டிற்
கவருறுநெஞ்சன்மன்னன்காரியம்பரிக்குநீரா
னெவரினுமுயர்ந்தோனாழ்வான்*சிச்சனாலூரானென்பான். (௮௰௧)

திருத்திகழ்மவுலிவேந்தேசிறந்தவிப்பெரியநம்பி
குருக்களாமெதிராசற்குக்கோதறுகூரத்தாழ்வான்
கருத்துறுசிச்சனாகுங்கதுமெனவுறுதியீதா
யிருத்துவித்திவரைத்தண்டித்தெழுத்திடுவித்திடென்றான். (௮௰௨)

நன்றெனமன்னன்சென்றநற்றவத்தோர்கடங்கட்
கொன்றலதிரண்டுபொங்கிலோங்குமாசனங்களிட்டாங்
கின்றுநீரிந்தவோலைக்கிடுகநும்மெழுத்தையென்றா
னென்றுமெக்காலும்பொன்றாவிருநரகத்தில்வீழ்வான். (௮௰௩)

ஓலையேதெழுத்தேதென்றாருடையவர்க்கினியவன்பர்
வேலைசூழ்பூமிவேந்தன்விளங்குசைவாகமத்தான்
மாலயனறியாரீதிவண்பரஞ்சிவமாமென்னக்
கோலியவோலையென்றான்கோதிலாவிருவர்மன்னா. (௮௰௪)

எங்களைக்கொண்டிவ்வோலைக்கெழுத்திடுவிப்பதென்றா
னுங்களுக்கானவாறுசெய்வதேயுறுதியென்றா
ரங்கவர்தம்மைநோக்கியரசனுமறைவனோலை
பங்கயில்குணத்திருங்களெழுத்திடப்படாதேயாகில். (௮௰௫)

உறுதியோரிறையுமில்லையென்றனனுலகாண்மன்னன்
மறுவறுகூரத்தாழ்வான்மன்னவன்முகத்தைநோக்கி

---

*சிச்சன் - சீடன்.

வெறுமிதுதொடங்கியென்னும்வேந்தனேயெவர்க்குமேலா
நிறுமலப்பிரமமோலையளவுமோநிற்பதென்றும். (௮௫௬)

சிவன்பரமென்னநீயேசெப்பியிங்கெழுத்திடென்றாய்
இவன்பரமானால்வேதனிருந்தலைகொய்ததுன்பு
மவன்பரமன்றோதீர்த்தலாங்கதுகூடாதேபோ
யெவன்பரமென்னவேறோரிறைவனையிரக்கலாமோ. (௮௫௭)

பாண்டியன்கூடறன்னிற்பரத்துவமுணர்ந்தவந்நா
ளாண்டுசெய்கிரியையன்றோவாசர்செய்கிரியைமன்னா
கூண்டிருந்துனக்குத்துன்பம்வருத்திடுங்குருக்கணின்பால்
வேண்டுவதுரைத்திட்டாலுமெய்மெய்யாம்பொய்பொய்யாமால். (௮௫௮)

உலகினையுண்டவந்நாளுமிழ்ந்தநாட்பன்றியாகி
நிலவியகோட்டிலண்டம்வைத்துறநிமிர்ந்தவந்நா
ளலகிலாவிரிவின்விண்ணுமண்ணையுமளந்தவந்நாட்
சிலவர்நின்போல்வாருண்டேற்சிவனவன்சேடமாமோ. (௮௫௯)

எருறுசிவனேமேலைப்பரமெனவெழுதுமோலை
சீர்பெறவவனையீன்றதிசைமுகனிறந்தநாளிப்
பாருறுவிசும்புநீராய்ப்பாழளவோங்குமன்று
தாரமாமுடியாயோலைதங்கரிக்கின்றதெங்கே. (௮௬௦)

ஓதுமின்மினியைநோக்கியொருவனாதவனிதென்றுந்
தீதறுமிரவிதன்னைச்சிறியமின்மினியதென்றும்
பேதமுற்றுரைத்தாலந்தப்பேதைதன்னளவுமன்றிக்
கோதறுமுலகுக்கெல்லாங்குறிப்பதற்குறுமோகோவே, (௮௬௧)

வேறு.

வேதமறியுமானறியும்விரிஞ்சனறியுமெய்ம்மையினைக்
கோதிலுலகம்பதினாலுமறியுமந்தக்குறிகிடப்ப
வோதுமோலைப்புறத்தெழுதியுபயப்படுத்தலெவரோடே
பூதமைந்துமிறந்தாலும்புரளாநிலையைப்புவிமன்னா. (௮௬௨)

அறியாதொன்றையோரொருவரறிவிற்காட்டிச்செயப்புக்கா
னெறியாநின்றகுரவர்கடனதனைத்தவிர்த்துநிலைநிறுத்தல்
பொறிவாய்ப்புலனாலாக்கவரும்போதமயங்கிப்பூபதியே
எறியாநின்றகனவிடைசெய்யீவாரொத்தாலென்னாமால். (௮௬௩)

என்றித்திறத்தையாழ்வானாங்கியம்பமன்னன்மிகச்சீறி
யொன்றும்பேசவேண்டாநீருரைத்ததெல்லாம்பொறுத்தனனா

னின்றுசிவத்தின்மேலொன்றுமிலதென்றோலைக்கெழுத்திட்டுக்
குன்றமெடுத்தான்றமர்விரைவிற்போமினென்னக்கூறினான். (௮௬௪)

கூரத்தாழ்வானதுகேட்டுக்குறுணியென்றுஞ்சிவமென்று
நேரொப்பிடுமோர்சொல்லுளதாமதனைநிலையாய்ப்பிடித்தெடுத்தாங்
கோரப்பட்டகுறுணிக்குமேலேபதக்குமுண்டென்னத்
தீரத்தெளிந்துதிருவெழுத்தையிட்டுக்கொடுத்தான்சீக்கிரத்தில். (௮௬௫)

மன்னனோலைதனைவாங்கிவாசித்தந்தவாசகங்கண்
டென்னசெய்தாய்கண்ணிரண்டுமின்றுவாங்குவேனென்று
னுன்னைக்கண்டகண்புலையாவிருக்கலாமோவெனவுரைத்துத்
தன்னையனையான்றிருநயனந்தன்னைத்தானேசேதித்தான். (௮௬௬)

வேறு.

அத்திறங்கண்டநம்பியுமாழ்வான்றனக்கிதோவடுப்பதென்றந்தோ
வித்திறங்காணவென்னைவைத்தனையோவெனவியமுனைத்துறைவரா
மெய்த்திறமுடையார்தனைநினைந்தென்னைவாங்குதிவிரைவிலென்றழுதான்
பொய்த்திறங்கடிந்தானுயிர்தன்னைப்பொருக்கெனத்திருமகள்கொழுநன். ()

வாங்கிவைகுந்தத்திருத்தினனாழ்வான்மடிமிசைநம்பிதன்னுடலைத்
தாங்கினன்மன்னன்சடக்கெனத்தில்லைச்சித்திரகூடத்தைச்சார்ந்தா
னேங்கினாரமரர்முனிவர்கணீசனென்செயப்புகுந்தனனென்ன
வோங்குமேழுலகும்படைத்தவெம்மானைப்புவரியிலெடுத்திடவுன்னி. (௮௬௮)

சென்றனன்றில்லைச்சித்திரகூடஞ்செறிந்தனன்செறிவதன்முன்னே
யன்றதிற்றிருக்கண்வளர்ந்தருண்மாயனநந்தனைமுதலவரோடு
மொன்றுமாங்கின்றிமறைந்தனன்மறைந்தாங்கோங்குவேங்கடமெனமறைக
ளென்றுநின்றேத்துந்திருப்பதிதனிலேயெழுந்தனன்யாவருமிறைஞ்ச. (௮௬௯)

கண்டிலனீசன்கண்ணனையெங்கேகருமுகிலனையவனென்று
னெண்டிசைநடுக்கச்சித்திரகூடந்தனையிடித்தெடுத்திருங்கடலி
லண்டரும்பதைப்பவிட்டனனாழ்வானலக்கணுநம்பிபோனதுவுந்
தண்டுழாய்முடியான்றிருவரங்கத்திற்கேட்டனர்கேட்டலுந்தமர்கள். (௮௭௦)

விரைவினிலானைக்காவினிலெய்திவிண்ணுலகடைந்தநம்பியையோர்
புரையறுசிந்தைக்கூரத்தாழ்வானைப்பொருக்கெனக்கொண்டரங்கத்தி
னிரையுறத்தொண்டரேகியக்கணத்தினிகரிலாநம்பியையவேத
வுரைவழிப்பள்ளிப்படுத்தனராழ்வானுறுதுயரங்கள்கேட்டிரங்கி. (௮௭௧)

ஆனவான்விடுவித்தழைத்தருகாக்கியாசறுகூரத்தாழ்வானீ
போனகாலத்திற்செய்ததீவினையாற்புகுந்ததன்மையிதுவென்றிடப்பு

வான்வர்நடுங்கவுன்னையித்துயரமன்னனைக்கொண்டுசெய்வித்துத்
தானலான்போலப்போனநாலூரான்றன்னையுந்தமரொடுமுனிந்தோம். (௮௭௨)

மன்னவனுடனேயவனுமாநரகின்மன்னுவன்மற்றதற்கவதி
யென்னுமிருள்ளவளவுநீயறிதியாவருங்காணவிக்கணத்தி
லுன்னிநீயுரைத்ததனைத்தையுந்தருவேனுரைத்தியிக்கணத்திலென்றுரைத்தான்
பொன்னவிர்மவுலியரங்கனாழ்வானப்புனிதனையடிதொழுதேத்தி. (௮௭௩)

வேறு.

தேன்பெற்றதுழாயலங்கற்றிருமாலேவேண்டுவது
நான்பெற்றபெருஞ்செல்வநாலூரான்பெறும்வரமிவ்
வூன்பெற்றுக்கிடைத்தபலமடியேனுக்குறுதிநின்னைத்
தான்பெற்றேனினிப்பேறுவேறுண்டோதனிமுதலே. (௮௭௪)

வேறு.

என்றிவையாழ்வான்கூறியிறைஞ்சலுமரங்கனாரு
மன்றல்சேர்குழலாள்சீதைமாருதியோடுக்கேட்ட
நன்றிசேர்*வாத்தைமானுநற்றவமுடையாயந்தோ
வின்றுநீயென்னிற்கேட்டவரமெனவிதங்கள்கூறி. (௮௭௫)

ஏகுதிமடத்திலென்னவிறைஞ்சிநின்றேத்தியாழ்வான்
மேகமேகாத்தியென்னவிடைகொண்டுமடத்திற்புக்கான்
பாகசாதனனும்வானத்தலைவரும்பணியுமெய்யன்
மாகமாறனைச்சென்றேத்தமற்றுமோர்தினத்திற்போனான். (௮௭௬)

தடையறவொருவன்கையைத்தாங்கிடவேகுங்காலை
யடைவிலாமன்னனாட்களரங்கனார்கோயில்காப்போ
ருடையவர்சம்பந்தத்தார்க்குள்புகத்தகாதிங்கென்றார்
நடையினின்றாழ்வான்மீண்டானனவனடிமையென்ன. (௮௭௭)

ஆசுறுகிருமிகண்டனாகியதுயரிற்பட்டுத்
தேசுறுமரங்கத்துள்ளார்சேர்ந்தனதுன்பமீதந்
நீசனாலேகியாழ்வானம்பியைநினைந்துவாடு
மாசிலாவெதிகணாதன்செய்கையும்வழுத்தலுற்றேன். (௮௭௮)

மன்னினன்சிலநாட்கோனவமன்னிநற்றொண்டரோடுந்
தன்னையேயனையவெம்மான்சாலிக்ராமியத்தைச்சார்ந்து
பன்னருந்துன்பநல்கும்பாதகனசிக்கும்வண்ண
முன்னினன்ஞானவேந்தனாகையாலுவமையில்லான். (௮௭௯)

பாதகக்கிருமிகண்டன்பொன்றிடப்படிமேலோமம்
வேதமந்திரத்தாற்பண்ணிவிளங்குமக்கனலிலாங்கே

---

* ‘வார்த்தை’ என்பது பிரதிபேதம்.

யோதுமோர்குறியைநோக்கியுலகினைக்கெடுத்தமன்னிப்
போதிவணசித்தானென்னப்பூரையிட்டிருந்தானந்நாள். (அஅ0)

கட்டுடனந்நாடாளுங்காவலன்கல்விமிக்கான்
விட்டலதேவனென்னும்வேந்தன்வந்தெதிராசன்றன்
மட்டவிழ்திருத்தாள்சேர்ந்துமாசறுசிச்சனானான்
எட்டெழுத்தவனுக்கோதியெதிகடந்தலைவனாரும். (அஅக)

வேறு.

ஏராம்மன்னவனாலேழுலகுந்தொழுதேத்துஞ்
சீராருந்திருநாராயணபுரத்திற்சிறப்பினொடுங்
காராருமுகின்மேனிக்கருமணியைப்பிரதிட்டித்
தாராதகாதலற்சங்காராதனைக்காக. (அஅஉ)

வேறு.

முன்பிற்றன்பாற்செறிந்தமருமுதியபாகவதத்திரளி
லன்புற்றைம்பத்திருவர்தமையமைத்தாங்காழ்வானம்பியெனத்
துன்பக்கடலிலேபடிவானொருநாட்டுதிக்குந்தொண்டரொடு
மின்புத்திசையுங்கலியாணசரயுக்கரையிற்போயிருந்தான். (அஅங)

வேறு.

ஆங்கிருந்தருளுங்காலையம்மங்கியம்மாளன்பி
னோங்குசீர்மாறொன்றில்லாமாருதியும்பர்வாழ்த்தும்
பாங்குறுசிறியாண்டானிப்பத்தர்கண்மூவர்நெஞ்சிற்
றூங்கியவின்பதுன்பந்தன்னொடுமொங்கநீங்கி. (அஅச)

எதிகணநாயனார்தம்பாலெய்தியாங்கிறைஞ்சியன்பிற்
றுதிசெய்துகரங்கள்கூப்பிச்சோபனந்துக்கமொந்தாய்
மதிசெயுமிரண்டுண்டென்னமன்னவன்மடிந்தவாறும்
விதிவழிநம்பியாழ்வான்பட்டதும்விளங்குந்தில்லை. (அஅரு)

சித்திரகூடத்துற்றசெய்கையுஞ்செப்பிநின்றார்
அத்திறங்கேட்டவெம்மானுசநகுராவாவென்ன
வெத்திறத்தெவருமஞ்சவிருநிலத்தலறிவீழ்ந்தான்
பத்தர்கடேற்றத்தேறான்பலபலபன்னினைவான். (அஅசா)

வேறு.

என்னைநாடிவந்தவரோடியானேகாதேயிருவினையா
லுன்னைக்காட்டிக்கொடுத்தடியேன்வந்தேனிந்தவுடருங்கிப்
பொன்னுக்கெடையாய்மண்பெற்றேன்புரைதீர்குரவேபூதலத்தின்
மன்னப்பட்டாரென்போல்வாருளரோவென்னவாய்குழறும். (அஅஎ)

எந்தாய்பெரியநம்பியெனக்கிதுவோவடுப்பதெனவலறு
மந்தாமம்புக்கனையோவென்னமுதேயென்னுமாவென்னுஞ்
செந்தேனொழுகும்பூம்பொழில்சூழ்சீராரங்கரிவ்வாழ்வோ
தந்தார்நமக்கென்றகங்கரையுந்தரையிற்புரளுந்தனையயரும். (அஅஅ)

ஊட்டிவளர்த்தகுருமணியேயுனக்குநானேயொன்னலன்போல்
நாட்டிற்பழிக்குமஞ்சாதேநரகையிறையுமதியாதே
காட்டிக்கொடுத்தேன்கிருமிகண்டன்கையிலதுகாரணமாய்நீ
வீட்டிற்புகுந்தாயங்குள்ளார்வினையேன்செயலைவியப்பாரே. (அஅகூ)

சீராராழ்வான்றிருநயனம்போனதிறத்தைச்சிந்திக்குங்
கூராராழிசங்கேந்துங்கொண்டறமர்கட்கிவ்வாழ்வோ
பாரோர்காணக்கிடைப்பதுதானென்னும்பலகாற்பதைத்திரங்கு
மேரார்சித்திரகூடத்திலிறைவற்கிரங்கியீடழியும். (அகூ0)

இன்னவாறேதான்புற்றங்கெம்மானிரங்கியெழுந்திருந்து
முன்னைவினையென்றுடன்றெளிந்துசென்றமுதியோர்முகநோக்கி
மன்னன்புரண்டபடியெங்ஙனென்றாரவர்கள்வணங்கியெழுந்
துன்னவரியாய்மன்னவன்வாய்புழுத்துச்செத்தானெனவுரைத்தார். (அகூக)

அந்தவார்த்தைசெவிபுகலுமாசிலாதவெதிநாதன்
இந்தவார்த்தையுரைத்தவர்க்கிங்கேதுகொடுப்போமெனவெண்ணிச்
சிந்தைகுளிர்ந்தார்க்கதின்மேலொன்றில்லாத்திறத்தைத்தெளிந்தவர்க்கு
முந்தமொழிந்தநயந்தன்னைப்பின்னுமொழிந்தான்முழுமுதல்வன். (அகூஉ)

வேறு.

ஓதறுநம்பியாழ்வானுறுதுயர்முற்காலத்திற்
கோதறுவினையாலேலுங்குலத்தொடுமரங்கரந்தப்
பாதகன்றன்னைக்கொன்றேயறுத்தனர்பகையென்றாலு
மேதிலாவரங்கந்தன்னிலெய்திலோமினிநாமென்ன. (அகூ௩)

வேறு.

எண்ணித்திருநாராயணத்திலிசையுஞ்*செல்லப்பிள்ளைக்கிம்
மண்ணின்மறைகள்விதித்தபடிவகுத்துத்திருவாராதனைகள்
பண்ணிச்சிறந்ததிருநாட்கள்பலவுநடத்திப்பரிவோடும்
விண்ணிற்றமர்களுறவாழ்த்தச்சிலநாளதனுள்வீற்றிருந்தார். (அகூ௪)

அந்தநாளிற்றிருவரங்கத்தம்மானெதிகடனிநாதன்
எந்தநாட்டிலெவராருகிலிருந்தானெனினுந்தான்விரைவில்
வந்துநம்மைக்காண்பதற்காய்வருகதமர்களோடுமென்னப்
பந்தமறுக்குந்திருமுகத்தைப்பரிவாலெழுதிப்புகவிடுத்தான். (அகூ௫)

---

* 'செல்வப்பிள்ளை' என்பது பிரதிபேதம்.

வேறு.

திருமுகங்கொண்டுசென்றாருடையவர்திருத்தாள்போற்றி
யருமுறைமுதல்வனீந்தான்றிருமுகமையாவென்றார்
தருகவென்றிறைஞ்சிவாங்கித்தலைமிசைச்சூடிநோக்கி
வருகநீவிரைவிற்றொண்டரொடுமெனும்வாசகத்தை. (அகசு)

வேறு.

கண்டுகதுமென்றெழுந்திருந்துகாதற்செல்லப்பிள்ளைக்காங்
கண்டர்புகழத்தொழில்செய்யுமைம்பத்திருவர்தமையழைத்திச்
கொண்டல்வண்ணனிணற்றருகிற்குறுகும்பிள்ளையதுகுறித்து
மண்டுகாதலொடும்பேணிவருமினென்னவகுத்தமைத்தான். (அகஎ)

வேறு.

இப்படியெதிகணுதனியம்பிடவவர்களெந்தா
யொப்பருமுத்திநாமுனைப்பிரிந்திருக்கிலென்றார்
செப்பருமெந்தையிந்தச்செங்கணுயகற்காட்செய்வார்
தப்பறநான்சேர்முத்திசார்ந்திடக்கடவனென்றார். (அகஅ)

வேறு.

*அஞ்ஞீற்றைம்பத்திருவர்பின்னுமவன்றாள்வணங்கியுனைநோக்கி
யின்புற்றிருந்தோமின்றளவும்பிரிந்தோமில்லேமினிப்பிரிந்தாற்
றுன்பப்புலிக்கேயிரையாவோமென்றுதொழுதாரெந்தையவ
ரென்புமுருகநின்றதுகண்டானுமென்னைக்கண்டிருமின். (அகக)

என்னத்தன்னையக்கணத்திலேறியருளப்பண்ணுவித்துத்
தன்னைத்தானேதாபித்துத்தழுவித்தான்றன்சத்தியெல்லா
முன்னற்கரியதிருவுருவிற்றூபித்தும்பர்தொழுதேத்த
மின்னைப்பொருவுந்திருமேனிச்செல்லப்பிள்ளைவிடைகொடுப்ப. (கூ00)

வேறு.

சீராருந்தொண்டரொடுந்திருவரங்கநகர்புக்கான்
காராதகாதலரும்பெருமானையடிதொழுதார்
ஏராருநம்பெருமாளெதிராசர்தமைநோக்கிப்
பாரோரிலொருவர்படாப்பெரும்பாடுபட்டனையே. (கூ0க)

வேறு.

என்பதனைத்திருவரங்கத்தெம்பெருமானருள்செய்யவெதிகணுதன்
வன்பெருவானகமுய்யமண்ணுய்யமண்ணுலகின்மனிதருய்யத்
துன்பமருந்துயரகலச்சுகம்வளரவகமகிழுந்தொண்டர்வாழ
வன்பொடுதென்றிசைநோக்கிநீகிடப்பத்துயருளதோவாதிநாதா. (கூ0உ)

* 'அன்பத்திருவர்பின்னுமவனருட்டாள்வணங்கி' என்பது பிரதிபேதம்.

வேறு.

என்றடிபணியநம்பெருமாளுமிருபதஞ்சென்னியிற்பதித்துச்
சென்றுநீயாழ்வான்றிருநயனம்போயிருந்தனனவனிடைச்செறிந்தாங்
கொன்றியகருத்திற்றன்பறத்தழுவியோங்கியவன்பர்களோடு
மின்றுநின்மடத்திலேகெனவிசைத்தானெதிகளுக்கதிபனுமீண்டான். ()

வேறு.

மீண்டவன்கூரத்தாழ்வான்மேவியவிடத்திற்சென்று
பூண்டுறத்தழுவிக்கொண்டுபொருமியபொருமநீர
வாண்டுறவழுதுவிம்மியையகோவாழ்வானம்பி
மாண்டனன்கொல்லோவென்னமண்ணவரிரங்கநைந்தே. (௯௦௪)

உனக்கிதுவருவதேயென்னுயிரனாயென்றானாழ்வான்
மனத்திடைத்திருமண்கோணிமற்றிவர்க்கிருந்ததென்னக்
கனத்தசீர்த்ததியர்தம்மிற்கருதியாங்கொருவர்பாலு
நினைத்திராதிருந்தேனோநானெறியுறுநிலையாயென்றான். (௯௦௫)

வேறு.

தொண்டக்குழாம்பின்னாழ்வானைத்தழுவிமனத்திற்றுயர்தீர்ந்தார்
மண்டுபுனல்சூழரங்கத்தின்மன்னும்பாகவதரெல்லாங்
கண்டங்கெதிகட்கதிபனிருகழற்கீழ்விழுந்துகதறியுளங்
கொண்டதுயரமறமுன்போற்குருமாமணியைக்கூடினார். (௯௦௬)

சந்தார்பொழில்சூழரங்கத்திற்றன்னையனையவெதிநாதன்
வந்தானென்னுஞ்சோபனத்தைக்கேட்டுமண்ணும்வானுலகுஞ்
சிந்தாகுலங்கடீர்ந்தனரெண்டிசையிலிசையுந்தொண்டர்களு
நந்தாவிளக்காமுடையவரைக்காண்பான்வந்துநண்ணினார். (௯௦௭)

வேறு.

நண்ணியதமர்களெல்லாநான்மறை*முடிவில்வைகும்
புண்ணியக்கொழுந்தன்னானைப்பூண்டுகொண்டழுதின்றிந்த
மண்ணினிலுன்னைக்காணப்பெற்றதே†வாழ்விங்கென்று
றெண்ணியவிதியைவெல்வார்யாவரென்றெதிகணாதன். (௯௦௮)

மற்றவர்தம்மைத்தேற்றிமாசிலாநம்பியாழ்வான்
கொற்றவன்கைப்பட்டெய்துந்துன்பமுங்கூறிநேர்ந்த
சிற்றியலாளன்றன்னைச்சீதான்சிதைத்தவாறு
முற்றவர்க்குரைத்துப்பின்னுமுடையவருரைக்கலுற்றார். (௯௦௯)

---

* 'முடியில்' என்பது பிரதிபேதம்.

† 'வாழ்வேயென்று' றென்பது பிரதிபேதம்.

வேறு.

கல்லைப்பெண்ணுருவாக்கியகாகுத்தன்கிடக்குந்
தில்லைச்சித்திரகூடத்தைச்சிதைத்தவத்தீயோ
னில்லைப்போயினனினியதைச்சீக்கிரத்தெடுத்துத்
தொல்லைப்பாம்பணைப்பரமனைத்துயில்விக்கவேண்டும். (௧௧௦)

என்றுகூறலுமறிந்தவரியம்புவரெந்தாய்
நன்றியொன்றியசித்திரகூடத்தைநவியப்
பொன்றிப்போயவங்ரீசனப்பதியினிற்புகுநாட்
குன்றம்போற்கிடந்தருளியகோவிந்தராயர். (௧௧௧)

சீருலாவியசித்திரகூடம்விட்டேகிக்
காருலாவியபொழிலிடைக்கரிகளுமுலாவ
வேருலாவியவேங்கடத்திமையவரோடும்
பாருலாவியபத்தருந்தொழுதெழப்பரிவால். (௧௧௨)

உதித்துளாரெனயாவருமுரைத்தனரென்று
றெதிக்குநாயகன்கேட்டலுமின்பமுற்றிறையைத்
துதிக்குமங்கையர்கோனுரைசொற்றவருமல்
விதிக்குநற்பதியிரண்டுக்குமொருவனாமேன்மை. (௧௧௩)

காட்டினான்கொலோவெனிலதுகாண்டுமென்றந்தக்
கூட்டமோடெழுந்தேகிநற்குருமணியருளிற்
பூட்டும்பேரருளாளர்தம்பூங்கழல்வணங்கி
நாட்டின்மாந்தரும்பின்செலநான்மறைமுழங்க. (௧௧௪)

ஆங்குநின்றெழுந்தமரர்கணாடொறும்பரவும்
வேங்கடத்தினைமன்னியப்பதியின்மெய்யனந்தன்
றூங்கக்கண்வளர்ந்தருள்வலத்தமரொடுங்கண்டா
னேங்குதென்றில்லைச்சித்திரகூடத்திலுவப்ப. (௧௧௫)

மன்னுஞ்செல்வனைவானவர்முறைமுறைபணிய
மின்னுமாமழைதவழும்வேங்கடத்தில்வித்தகனை
யென்னமுன்பெருமடலினிற்கலிகன்றியிசையாற்
பன்னூற்பயனிதுவெனக்*காட்டியபடியே. (௧௧௬)

அங்குநின்றறமறைந்தினிதமரர்கள்வணங்க
விங்குவந்துகண்வளர்ந்ததின்றெந்தையென்றிறைஞ்சி
மாகுறோய்மணிக்கோயிலுமாடமாளிகையுஞ்
செங்கணாயகற்கத்தலத்திருந்துசெய்வித்தே. (௧௧௭)

* ‘காட்டியப்படியே’ என்பது பிரதிபேதம்.

எந்தைபின்புவேங்கடத்திறைபூங்கழலிறைஞ்சிச்
சிந்தையுண்மகிழ்ந்தேத்தினனேத்தலுந்திருமா
லந்தமில்குணத்தாயுனக்காங்கமாநகரிற்
றந்துளோமுனம்விபூதிகளிரண்டையுந்தனதாய். (கூகஅ)

இன்னம்வேண்டுவதியம்புதியெனத்திருப்பவள
மன்னமூர்திதன்றுதையார்திறந்தருள்செய்ய
வுன்னையென்னுயிர்க்குறுதியாய்ப்பெற்றனனிதன்மே
லென்னவேண்டுவதினியெனவிறைஞ்சிநின்றேத்தி. (கூககூ)

வேறு.

பெரியதிருமலைநம்பிபிரசமலரடிவணங்கி
விரிபுகழ்சேரெதிராசன்விடைகொண்டுதொண்டரொடு
மரியமறைதொழுங்காஞ்சியருளாளரடிவணங்கித்
தெரிவரியதென்றில்லைச்சித்திரகூடந்தன்னை. (கூஉ0)

வேறு.

கட்டுவித்ததனின்மாயன்கண்வளர்ந்தருளும்வண்ணஞ்
சிட்டர்களோடும்வந்தத்திருப்பதிதன்னைமன்னி
யுட்டெளிவுடையவெம்மானும்பரும்பிறரும்வாழ்த்த
மட்டவிழ்பொழில்சூழ்தில்லைவளநகர்வளங்கொண்டோங்க. (கூஉக)

சித்திரகூடமுன்பிற்சிறப்புறக்கட்டுவித்தாங்
கெத்திறத்தெவரும்போற்றுமிறைவனைப்பிரதிட்டித்திட்
டத்திறத்தவற்கன்போடுமெணிதிருவிழாக்களுளும்
பத்தர்கள்பரவியேத்தநடந்திடும்படிகள்செய்தே. (கூஉஉ)

வேறு.

அந்தமாயன்றனைநோக்கியருள்சேர்தில்லைக்கோவிந்தா
விந்தவினோதமினியொருகாற்செய்யேலென்னவிசைத்தேத்திப்
பந்தங்கடிந்தவெதிராசன்பத்தர்துதிப்பவிடைகொண்டு
சிந்தைகளிப்பவரங்கத்திற்றேவைப்பணிந்தாங்கினிதிருந்தார். (கூஉங)

(தொடரும்)

உதவிப்பத்திராதிபர்.

தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகனுபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்

ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்

எழுதுவது.

[சகூஉ-ம் பக்கத் தொடர்ச்சி.]

284-வது சூத்திரம்.
எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயிற்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்.

இச்சூத்திரவுரையில் உரையாசிரியர் எஞ்சுபொருட்கிளவி, செஞ்சொல் என்றசொற்களுக்கு முறையே எச்சவும்மை செவ்வெண் என்று பொருள்கொண்டு 'அடகு புலால் பாகு பாளிதமு முண்ணான்' என்று உதாரணங் கூறுகின்றனர். சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் அவற்றிற்கு முறையே எச்சவும்மையாற்றழுவப்படும் எஞ்சுபொருட் கிளவி, உம்மையில்சொல் என்று பொருள்கொண்டு 'சாத்தன்வந்தான் கொற்றனும்வந்தான்' என்றும் 'அடகு புலால் பாகு பாளிதமு முண்ணான்' என்றும் உதாரணங் கூறுகின்றனர்.

288-வது சூத்திரம்.
எண்ணே கார மிடையிட்டுக் கொளினு
மெண்ணுக்குறித் தியலு மென்மனார் புலவர்.

இச்சூத்திரத்தின்பொருள்:—

உரையாசிரியர்:—எண்ணேகாரம் இடைநின்று ஒழிந்த எண்ணால் வந்தனவற்றையும், ஏகாரவெண்ணால்எண்ணினவே எ-று. ஏகாரம் எண்ணிடையே நின்றது எனினும், எண்ணிவருகின்ற எண்ணேயாம் என்றுமாம் எனக் கொள்க.

சேனாவரையர்:—சொற்றொறும்வாராது எண்ணேகாரம் இடையிட்டுவரினும் எண்ணுதற்பொருட்டாம் எ-று.

நச்சினார்க்கினியர்:—உம்மையும் ஏகாரமும் எனவும் என்றும் எனவும் என்றுவுஞ் செவ்வெண்ணுமாகிய ஏழுவகையெண்களுள்

ஒன்று முதல் நின்று, ஏகாரவெண்ணைத் தன்னிடத்தே அழைத்துக் கொண்டுநிற்பினும் பிற எண்களைத் தன்னிடத்தே அழைத்துக்கொண்டு நிற்பினும் பல எண் வந்தனவென்று குற்றமாகா, தான்உணர்த்தும் எண்ணுப்பொருளையே அப் பலவுங் குறித்து நடக்கும் என்று கூறுவர் புலவர்.

உரையாசிரியர்கூறும் பொருளை நோக்குமிடத்து, சூத்திரத்திற் கண்ட எண்ணேகாரம் என்பதனை எண், எண்ணேகாரம் என்று பிரித்து, ஒன்றை எண்ணுக்குறித்தியலும் என்பதற்கு எழுவாயாகவும் மற்றொன்றைஇடையிட்டுக்கோளினும் என்பதற்குச் செயப்படுபொருளாகவுங் கொள்ளவேண்டும். நச்சினார்க்கினியர்மதப்படி எண் என்பதனை எண்ணுக்குறித்தியலும் என்பதற்கு எழுவாயாகவும் எண்ணேகாரம் என்பதனை இடையிட்டுக்கோளினும் என்பதற்குச் செயப்படு பொருளாகவுங் கொள்ளவேண்டும். சேனாவரையர்மதப்படி எண்ணேகாரம் என்பதற்கு எண்ணைக்குறிக்கும் ஏகாரம் என்று பொருளாதலால், எண் என்பது ஏகாரம் என்பதற்கு அடைமொழியாகும்.

உரையாசிரியர்மதத்தைச் சேனாவரையர்'அவ்வாறு விராயெண்ணிய வழிப் பிறவெண்ணாற் பெயர்கொடுப்பின் அதனை ஏகாரவெண்ணென் பாரையும் விலக்காமையானும், பிறவெண்ணுமென்றதனாற் பெறப்படுவதோர் பயனின்மையானும், அவர்க் கது கருத்தென்றெனக' என்றசொற்றொடரால் மறுக்கின்றனர். இம்மறுப்பை நச்சினார்க்கினியர் மறுக்காது, உரையாசிரியர்கூறியபொருள் இரண்டனுள் ஒன்றைத் தழுவுவது நோக்கத்தக்கது.

௨89-வது உம்மை தொக்க வெனாவென் கிளவியு
சூத்திரம். மாவீ றகிய வென்றென் கிளவியு
மாயிரு கிளவியு மெண்ணுவழிப் பட்டன.

இச்சூத்திரத்தின்பொருள்:—

சேனாவரையர்:—உம்மைதொக்குநின்ற எனாவென்னு மிடைச் சொல்லும் என்றாவென்னு மிடைச்சொல்லும் இரண்டும் எண்ணு நடத்து வரும் எ-று. உ-ம். நிலனெனா நீரெனா எனவும், நிலனென்றா நீரென்றா எனவும் வரும்,

நச்சினார்க்கினியர்:—முன்னர் எண்ணும்மை அடுக்கிநின்ற என என்னும் இடைச்சொல்லும், முன்னர் எண்ணும்மை அடுக்கிநின்ற ஆகாரத்தை ஈறாகவுடைய என்று என்னும் இடைச்சொல்லும், அவ் விரண்டுசொல்லும் எண்ணுமிடத்தே சிறந்துவரும் எ-று. உ-ம். 'ஒப்பு முருவும்வெறுப்புமென்று' என்னுஞ் சூத்திரம் உம்மைதொக்க என்று. உம்மை தொக்க என வந்தவழிக் காண்க.

உரையாசிரியர், சேனாவரையர் இவ்விருவர்மதமும் ஒன்றே; இருவரும் ஒரேவிதமாக உதாரணங்கூறியுள்ளார். சூத்திரத்திற்கண்ட தொக்க என்ற சொல்லுக்கு உரையாசிரியரும், சேனாவரையரும் தொக்கு நின்ற என்றபொருள்கொள்ளுவதும், அச்சொல்லுக்கே நச்சினார்க்கினியர் அடுக்கிநின்ற என்றபொருள்கொள்ளுவதும் நோக்கத்தக்கன. 'உம்மை தொக்க என்பதற்கு நிலனெனவும் என ஈற்றுநின்ற உம்மைதொக்கு நிலனென என்றல் வழக்கமின்மையானும், எனவும் என்றும் எண் ணிடைச்சொல்லாதல் மேலிற்சூத்திரத்தாற் பெறப்படுதலானும் இதுவே ஆசிரியர்கருத்து' என்ற சொற்றொடரால் நச்சினார்க்கினியர், உரை யாசிரியர் சேனாவரையர்: இவர்களின்மதத்தை மறுத்தனர். நச்சினார்க் கினியர்மதமே பொருந்துவதாகப்படுகிறது.

290-வது சூத்திரம். அவற்றின் வரூஉ மெண்ணி னிறுதியும்
....
யாவயின் வரினுந் தொகையின் றியலா.

இப்போது பதிப்பித்துள்ள இளம்பூரணத்தில்,

" 'சாத்தன், கொற்றன், பூதன் என மூவரும் வந்தார்' என வரும் செவ்வெண்.

'சாத்தன் என்று, கொற்றன் என்று, பூதன் என்று என மூவரும் வந்தார்' என வரும் என்று எண்.

'சாத்தனே, கொற்றனே, பூதனே என மூவரும் வந்தார்'என வரும் ஏகார எண்.

தொகைபெற்று முடிந்தவாறு கண்டுகொள்க" என்று உள்ளது.

தோகைபெற்றுமுடிந்தவாறு என்பதற்கு சேவ்வேண், என்ரூ எண், ஏகாரஎண் இம்மூன்றும் எழுவாயாயிருத்தலால் அப்பகுதியிற் செவ்வெண்முதலிய மூன்றினதுபின்னர் முற்றுப்புள்ளியிடாது, காற்புள்ளி இட்டு அவற்றை ஒன்றுக்குப்பின் ஒன்று தொடர்ந்துவரப் படிக்க.

291-வது சூத்திரம்:—உம்மை யெண்ணி னுருபுதோகல் வரையார்.

இப்போது பதிப்பித்துள்ள இளம்பூரணத்தில் இச்சூத்திரத்தினடியில் "'யானையும் தேரும் ஆளும் எறிந்தார்' என்பது, யானையையும் தேரையும் ஆளையும் எறிந்தார் எ-று. உம்மையெண்ணின்கண் உருபு தொக்கவாறுயிற்று" என்ற வாக்கியந்தான் உளது. இவ்வாக்கியத்துக்கு மேல் 'யானை தேர் குதிரை காலாளெறிந்தார் என உம்மையும் உருபும் உடன்றொக்கவழி உம்மைத்தொகையென்னுது உருபுதொகை யென்க' என்ற வாக்கியமும் உரையாசிரியரால் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்பது, இதன்மேல், சேனுவரையர்கூறும் மறுப்பாலும், 'உம்மையும் உருபுந் தொக்கவழியும் உருபுதொகையெனப்படுமென வழுவமைத்தது', 'இரண்டு தொக்கனவற்றை என்னதொகையென்றுகோடுமோவெனின், ...அச்சிறப்புநோக்கி உருபுதொகையென்றே கோடும்' என்ற நச்சினுர்க்கினியர்வாக்கியங்களாலும் நன்கு புலப்படும்.

எச்சவியலில் ஆசிரியர்கூறியுள்ள அறுவகைத்தொகையுள், உருபு தொகையென்பது கூறப்படாததாலும், வேற்றுமைமயங்கியலிலேயே 'உருபுதொகவருதலும்' என்று ஆசிரியர் கூறியிருத்தலாலும், வேற்றுமைத்தொகையினும் உருபுதொக்குநிற்பதால் அதனையும் உருபு தொகையென்னவேண்டிவருமாதலானும், சேனுவரையர்கூறியுள்ள 'உம்மைத்தொகையாதலின் ஒருசொன்னடைத்தாய் உருபேற்றுழும் பயனில கொண்டானும் நிற்கும்: அத்தொகையிடை உருபின்மை சிற்றறிவினர்க்கும் புலனும்' என்னுங் காரணத்தாலும், 'உம்மையும் உருபுந் தொக்க உருபுதொகை யென்று கூறவெண்டுமென்பதை உணர்த்துகின்றது இச்சூத்திரம்' என்றஉரையாசிரியர், நச்சினுர்க்கினியர் இவர்களின் கொள்கை எவ்வாறு பொருந்தும் ?

சேனுவரையத்திற் 'குன்றி கோபங் கொடிவிடு பவள-மொண்செங்காந்த ளொக்கு நின்னிறம்' என்றவிடத்து 'அவற்றை என்றசொல் விரிக்கக், குன்றிமுதலாயின எழுவாயாகும்' என்று கூறப்பட்டுள்ளது.

இங்குச் சேனாவரையர் எழுவாய் என்றது முதல்வேற்றுமை என்ற பொருளை உட்கொண்டு. நச்சினார்க்கினியர் எழுவாய்என்பதற்குக் கருத்தா என்ற பொருளை உட்கொண்டு சேனாவரையரை 'இக் குன்றிமுதலிய வற்றைச் செவ்வெண்ணாக்கி இவற்றையெனத் தொகைகொடுத்து உருபு விரித்துழியும் அச்சுட்டு அக் குன்றிமுதலியவற்றையே சுட்டுதலின் அக் குன்றிமுதலியன செயப்படுபொருளாயேநிற்குமாறு உணர்க' என்ற வாக்கியத்தால் மறுத்துள்ளார்.

293-வது வினையோடு நிலையினு மெண்ணுநிலை திரியா
சூத்திரம். நினையல் வேண்டு மவற்றவற் றியல்பே.

இச்சூத்திரவுரையில் 'சாத்தன்வந்தான், கொற்றன்வந்தான், வேடன் வந்தான், அம்மூவரும் வந்தார்; அம்மூவரும்வந்தமையாற் கலியாணம் பொலிந்தது' எனத் தொகைபெற்றுவந்தவாறு' என்றார் உரையாசிரியர். இதனை 'அவை எழுவாயும் பயனிலையுமாய் அமைந்து மாறுதலின் எண்ணப்படாமையானும், மூவருமென்பது சாத்தன்முதலாயினோர்தொகையாகலானும், அது போலியுரையென்க' என்று சேனாவரையர் மறுத்துள்ளார். இதனை 'இவை எழுவாயும் பயனிலையுமாய்நிற்றலின் எண்ணப் படாவெனின், ஒருபொருள்வேறுபாட்டான் எண்ணினார். இதனை இம் மூவரும் உடன்வரிற் கலியாணம்பொலியுமென்று இருக்கின்றான் கூற்றாகக் கொள்க.........உணர்க' என்ற சொற்றொடரால் நச்சினார்க்கினியர் மறுத்துள்ளார்.

294-வது என்று மெனவு மொடுவுந் தோன்றி
சூத்திரம். யொன்றுவழி யுடைய வெண்ணினுட் பிரிந்தே.

இச்சூத்திரவுரையில் 'இவைமூன்றும் பொருளிற்பிரிந்து எண் ணின்கண் அசையாய் வருதலுடையவென்பது உரையாசிரியர்க்குக் கருத் தென்பாருமுளர்' என்று சேனாவரையர் கூறுகின்றனர். இக் கருத் துடையார் யார் என்பது ஆராயத்தக்கது.

இடையியல் முற்றிற்று.

உரியியல்.

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
யிசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்
பெயரினும் வினையினு மெய்தடு மாறி
297-வது யொருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
சூத்திரம். பலசொல் லொருபொருட் குரிமை தோன்றினும்
பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்த மரபிற் சென்றுநிலை மருங்கி
னெச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்.

இச்சூத்திரத்தின் பொருள்:—

உரையாசிரியர்:—உரிச்சொற்கள் தோன்றுமிடத்து இசையும் குறிப்பும் பண்பும்பற்றிப் பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் சென்று பொருள்களை விளக்கும் என்றவாறு. மெய் என்பது பொருள்; தடுமாறுதல் என்பது பெயர்பற்றியும் வினைபற்றியும் வரும் வாவினைநோக்கி; அவ்வாறு தடுமாறுங்கால் ஒருசொல் பல்பொருட்கு உரிமைப்பட்டுத் தடுமாறுதலும், பலசொல் ஒருபொருட்கு உரிமைப்பட்டுத் தடுமாறுதலும் உடைய. அவை அவ்வாறு தடுமாறித்தோன்றுதல் அவற்றிற்கு இலக்கணம்; அவ்வாறு தோன்றுங்காற் பயிலாத உரிச்சொற்கள் பயின்ற உரிச்சொல்லோடு சார்த்தி உணரப்படும். அவ்வாறு சார்த்திச்சொல்லவே எவ்வகைப்பட்டசொல்லாயினும் பொருள்விளங்கும்.

பேராசிரியர்:—உரிச்சொல்லென்ப தியாதோவெனின் ஒருவாய் பாட்டாற் சொல்லப்படும்பொருட்குத் தானு முரித்தாகிவருவது. அதனானேயன்றே 'ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும், பலசொலொருபொருட்குரிமைதோன்றினு' மெனவோதுவாராயிற்று. எழுத்ததிகாரத்துள்[1] இதனைக் குறைச்சொற்கிளவியென்றோதினமையான் வடநூலாசிரியர் தாதுவென்று குறியிட்ட சொற்களே யிவையென்று கொள்ளப்படும்; அவையுங் குறைச்சொல்லாதலான். அஃதேற் றொழிற் பொருண்மையுணர்த்துவனவெல்லா மிதனுளோதினாரோவெனின் 'வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா, வெளிப்படவாரா வுரிச்சொன் மேன' என்றாராகலின், வழக்கின்கட் பயிற்சியில்லாதசொற்க ளிண்

[1] தொல். எழுத். குற்றியலுகரப். 76.

டெடுத் தோதப்படுகின்றன வென்க......பெயரினும் வினையினும் மெய் தடுமாறி என்பது உரிச்சொல்லாகி உருபு பெயரின்கண்ணும் வினையின் கண்ணுந் தடுமாறி, அவை தடுமோறுங்கால், பெயர் வினைகளைச் சார்ந் தும் அவற்றிற்கு அங்கமாகியும் வரும். உறுவலிபென்பது பெயரைச் சார்ந்துவந்தது. உறக்கொண்டான் என்பது வினையைச்சார்ந்துவந்தது. உறுவன் என்றவழிப் பெயர்க் கங்கமாயிற்று. உறன் என்றவழி வினைக் கங்கமாயிற்று.

சேனாவரையர்:—உரிச்சொல் விரித்துரைக்குமிடத்து, இசை குறிப்புப் பண்பென்னும் பொருண்மேற் றோன்றி, பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் தம்முருபு தடுமாறி, ஒருசொற் பலபொருட்குரித்தாய் வரினும் பலசொல் ஒருபொருட்குரித்தாய்வரினும் கேட்போனாற் பயிலப் படாதசொல்லைப் பயின்றவற்றோடு சார்த்திப் பெயரும் வினையுமாகிய தத்தமக்குரிய நிலைக்களத்தின்கண் யாதானு மொருசொல்லாயினும் வேறுவேறு பொருளுணர்த்தப்படும் என்றவாறு. என்றது, இசை குறிப்புப் பண் பென்னும் பொருளவாய்ப் பெயர் வினை போன்றும் அவற் றிற்கு முதனிலையாயுந் தடுமாறி ஒருசொல் ஒருபொருட்குரித்தாதலே யன்றி, ஒருசொற் பலபொருட்கும் பலசொல் ஒருபொருட்கும் உரியவாய் வருவன உரிச்சொலென்றும், அவை பெயரும் வினையும்போல ஈறு பற்றிப் பொருளுணர்த்தலாகாமையின் வெளிப்படாதவற்றை வெளிப் பட்டவற்றோடு சார்த்தித் தம்மையெடுத்தோதியே அப்பொருளுணர்த் தப்படு மென்றும், உரிச்சொற்குப் பொதுவிலக்கணமும் அவற்றிற்குப் பொருளுணர்த்து முறைமையு முணர்த்தியவாறு.

நச்சினார்க்கினியர்:—உரிச்சொல்லாகியசொல்லை விரித்துணர்த்து மிடத்து ஒருசொல் ஒருபொருட்கு உரித்தாய்வாராது பலபொருட்கு உரித்தாய் மயங்கிவரினும், பலசொல் ஒருபொருட்கு உரியவாய் மயங்கி வரினும் இசைப்பொருண்மைக்கண்ணும் மனத்தாற்குறித்துணரும் பொருண்மைக்கண்ணும் பண்புப்பொருண்மைக்கண்ணும் வெளிப்பட்டுப் பெயர்வினைகள்போன்றும் அவற்றிற்கு முதனிலையாயுந் தம்முருபு தடு மாறித் தத்தமக்கு உரிய முறைமையாற் சென்றுநிற்கும் நிலைக்களங்க ளாலே கேட்போனாற் பொருளுணர்ப்படாத எவ்வகைப்பட்ட சொல்லாயி னும் பயிலப்படாத சொல்லைப் பயின்றவற்றோடு சேர்த்திப் பொருளை வேறுவேறுசொல்லுக.

உரைகாரர்கள் நால்வரும் இச்சூத்திரத்திற்குப் பொருள் ஒரேவிதமாகவே கொண்டனர் என்று தோன்றுகின்றது. பேராசிரியர் உரை உரிச்சொல்லின் இலக்கணத்தை மிகத் தெளிவாய் உணர்த்துகின்றது.[1] சூத்திரத்திற் கண்ட மெய் என்ற சொல்லுக்கு உரையாசிரியர் பொருள் என்றும் மற்ற மூவரும் உருபு (உருவம்) என்றும் பொருள்கொண்டது கவனிக்கத்தக்கது.

உரிச்சொல் என்பதன் பொருள்.

சேனாவரையர்:—தமக் கியல்பில்லா விடைச்சொற்போலாது இசை குறிப்புப் பண்பென்னும் பொருட்குத் தாமேயுரியவாதலின் உரிச்சொல்லாயிற்று. பெரும்பான்மையுஞ் செய்யுட்குரியவாய்வருதலின் உரிச்சொல்லாயிற் றென்பாருமுளர்.

நச்சினார்க்கினியர்:—சேனாவரையர்கூறிய முதற்கொள்கையைக் கூறி இரண்டாவதைக் கூறாராயினர். உரிச்சொல்லென்பது தாது ஆதலால் வழக்கில் தாதுக்களாற் றோன்றாத சொற்கள் அரியனவாகையால், சேனாவரையர்கூறிய இரண்டாங்கொள்கை எவ்வாறுபொருந்தும்.[2]

[தொடரும்.]

---

[1] இதேகருத்தைச் சிவஞானமுனிவர் 'நட, வா முதலிய முதனிலைகளுந் தொழிற்பண்பையுணர்த்துஞ்சொற்களாகலின், உரிச்சொல்லேயாமெனவுணர்க' என்றவாக்கியத்தாற் குறிப்பிட்டதைக் காண்க.

[2] இக்காரணத்தாலேயே 'தமிழுக்கு உரியசொல் உரிச்சொல்' என்ற சிலர் கொள்கை பொருந்தாது என உணர்க.

உ

தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் விபவஸூ பங்குனிமீ 19, 20, 21
(1929-ம்ஸூ ஏப்ரல்மீ 1, 2, 3)-ஆம் தேதிகளில்
நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறிப்
பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும்
மாணாக்கர்களின் அபிதானபத்திரம்.

பண்டிதபரீக்ஷை.

1-வது வகுப்பு.

தொடர்க்கு நெ.	ரிஜிஸ்டர் நெ.	
1	2	தி. சங்குப்புலவர், பூசாரிக்கவுண்டன்பட்டி, சின்னமனூர்ப் போஸ்டு, மதுரைஜில்லா.
		(முதற்பரிசு ரூ. 100 பெறத்தக்க தங்கத்தோடா.)

2-வது வகுப்பு.

தொடர்க்கு நெ.	ரிஜிஸ்டர் நெ.	
1	1	நாராயணசாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
2	6	B. R. புருஷோத்தமநாயுடு, தமிழ்ப்பண்டிதர், முருகப்பிள்ளைதெரு, சிதம்பரம்.

பாலபண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.

தொடர்க்கு நெ.	ரிஜிஸ்டர் நெ.	
1	11	மீ. முத்துச்சாமி, மாணவர், கணேசர் செந்தமிழ்க்கலாசாலை, மேலைச்சிவபுரி.
2	10	கு. குமாரசாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

பிரவேசபரீக்ஷை.

1-வது வகுப்பு.

1 24 வெ. முத்துக்கிருஷ்ணசாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

(முதற்பரிசு ரு. 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்.)

2 23 சி. குமாரசாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

(இரண்டாவதுபரிசு ருபா. 30.)

2-வது வகுப்பு.

1 28 வ. பெ. ஸ்ரீநிவாஸநாயுடு, போர்டு எலிமெண்டரி ஆண்பாடசாலை, கோவில்பட்டி S. I. Ry.

2 68 அ. குப்புசாமிப்பிள்ளை, நிர். 11, கிழக்குவாணியத்தெரு, போளூர். (N. A. Dt.)

3 65 லெ. ப. கரு. இராமநாதன்செட்டியார், 141. Sea Street, கொழும்பு.

M. Dinakara,

அக்கிராஸநாதிபதி,

மதுரைத்தமிழ்ச்சங்கம்.

4—7—'29.

உ

ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1929-ம்௵ மார்ச்சுமீ 2௳ நடத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும் மாணாக்கர்களின் அபிதானபத்திரம்.

பீ. ஏ., பரீக்ஷை.

2-வது வகுப்பு.

தொடர்ச்சி நெ.	ரிஜிஸ்டர் நெ.	
1	1	N. S. சிவசுப்பிரமணியன், ஸெண்ட் ஜோஸப் காலேஜ், திருச்சி.

எப். ஏ. பரீக்ஷை.

2-வது வகுப்பு.

1	104	R. A. சுப்பிரமணியன், முனிசிபல் காலேஜ், சேலம்.
2	114	R. இராமதாஸ், ஷை ஷை
3	103	M. S. கிருஷ்ணமூர்த்தி, ஷை ஷை
4	54	M. ஜோஸப் பாண்டியராஜ், St. Francis Xavier's College, பாளையங்கோட்டை.
5	128	K. அரங்கநாதன், பச்சையப்பா காலேஜ், சென்னை.
6	53	M. இராஜசிகாமணி, St. Francis Xavier's College, பாளையங்கோட்டை.
7	108	R. பெருமாள், முனிசிபல் காலேஜ், சேலம்.
8	111	S. வைத்தியநாதன், ஷை ஷை

9 70 S. கணபதி, ஸெண்ட் ஜான் காலேஜ், பாளையங்கோட்டை.

10 19 M. தேவதாசன்தவமணி, பிஷப் ஹீபர் காலேஜ், திருச்சி.

11 6 N. கந்தசாமி, நாஷனல் காலேஜ், திருச்சி.

12 123 S. சீதாராம ஐயர், இஸ்லாமியா காலேஜ், வாணியம்பாடி.

13 55 C. A. மீனாக்ஷிசுந்தரம், St. Francis Xavier's College, பாளையங்கோட்டை.

14 20 A. சண்முகசுந்தரம், பிஷப் ஹீபர் காலேஜ், திருச்சி.

15 57 K. நாராயணன், St. Francis Xavier's College, பாளையங் கோட்டை.

16 59 V. K. நாராயணன், ஷை ஷை

17 105 T. K. வெங்கடசுப்பன், முனிசிபல் காலேஜ், சேலம்.

18 17 சி. கோவிந்தன், பிஷப் ஹீபர் காலேஜ், திருச்சி.

19 153 P. கனகசபைப்பிள்ளை, ஸ்ரீமீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.

20 151 M. C. கோவிந்தன், ஷை ஷை

21 44 N. A. சேஷன், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.

22 50 N. இலக்குமணப்பெருமாள், ஷை ஷை

23 155 S. கணேசன், மீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.

24 16 S. ஐயநாடார், பிஷப் ஹீபர் காலேஜ், திருச்சி.

25 157 S. சுப்பராயன், ஸ்ரீமீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.

26 91 A. கிருஷ்ணமாச்சாரி, ஸெண்ட் ஜான் காலேஜ், பாளையங் கோட்டை.

27 124 T. வெங்கடராமன், இஸ்லாமியா காலேஜ், வாணியம்பாடி.

28 141 S. முத்துக்குமாரசுவாமி, பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.

29 154 V. பாலகிருஷ்ணன், ஸ்ரீமீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.

30 65 P. ஷண்முகம், St. Francis Xavier's College, பாளையங் கோட்டை.

31 99 M. அஹ்மத், ஸ்காட் கிறிஸ்டியன் காலேஜ், நாகர்கோவில்.

32 63 P. பாலசுப்பிரமணியன், St. Francis Xavier's College, பாளையங்கோட்டை.

மெற்றிக்குலேஷன்பரீக்ஷை.

1–வது வகுப்பு.

1 340 S. குப்புச்சாமி ஐயங்கார், முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.
[முதற்பரிசு ரு. 30. (வெள்ளிப்பதக்கமும் மீத ரூபாவும்)].

2 342 K. ஷண்முகம், முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.
[இரண்டாவது பரிசு ரூபா 25.]

3 173 K. சிதம்பரம், நாஷனல் காலேஜ் ஹைஸ்கூல், திருச்சி.
[மூன்றவது பரிசு ரூபா 20].

4 331 K. ஆண்டியப்பன், ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி,
[நான்காவது பரிசு ரூபா 15].

5 174 K. மருதப்பன், பிஷப் ஹீபர் காலேஜ் ஹைஸ்கூல், திருச்சி.
ஐந்தாவது பரிசு 12].

6 188 F. முகமத் கவுஸ், St. Francis Xavier's College ஹைஸ்கூல், பாளையங்கோட்டை.

7 217 N. சுப்பிரமணியன், ஸென்ட் மிக்கேல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.

8 332 V. வேங்கடராமன், போர்டு ஹைஸ்கூல், நன்னிலம்,

2–வது வகுப்பு.

1 225 R. கிருஷ்ணசிங், ஸர்வஜனஹைஸ்கூல், பீளமேடு.

2 194 M. துரைராஜ், St. Francis Xavier's College ஹைஸ்கூல், பாளையங்கோட்டை.

3 184 M. கிருஷ்ணமூர்த்தி, போர்டு ஹைஸ்கூல், குளித்தலை.

4 281 R. திருநாவுக்கரசு, பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.

5 244 D. ராதாகிருஷ்ணன், ஸென்ட் ஜோஸப் செக்கண்டரி ஸ்கூல், கூடலூர்.

6 250 H. சஞ்சீவிராவ், ஹைஸ்கூல், உரத்தநாடு.

7 298 K. சாமிக்கண்ணு, விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.

8 185 P. V. கிருஷ்ணமூர்த்தி, போர்டு ஹைஸ்கூல், குளித்தலை.

9 240 V. சுந்தரராஜன், ஸெண்ட் ஜோஸப் செக்கண்டரி ஸ்கூல், கூடலூர்.

10 245 O. S. கிருஷ்ணமூர்த்தி, ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி.

11 246 M. ரத்தினசாமி, ஷை ஷை

12 190 S. வண்ணமுத்து, C. M. ஹைஸ்கூல், திருநெல்வேலி.

13 327 S. கந்தசாமி, ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.

14 328 M. கருப்பையா, ஷை ஷை

15 351 S. துரைராஜ், A. A. M. ஹைஸ்கூல், திண்டிவனம்.

16 273 V. S. கிருஷ்ணமாச்சாரி, P. S. ஹைஸ்கூல், மயிலாப்பூர்.

17 176 S. வெங்கிட்டராமன், போர்டு ஹைஸ்கூல், குளித்தலை.

18 197 S. வைத்தியநாதன், St. Francis Xavier's College ஹைஸ்கூல், பாளையங்கோட்டை.

19 239 C. V. லக்ஷ்மீபதி, மஹாராஜன ஹைஸ்கூல், ஈரோடு.

20 321 A. கந்தசாமி, ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.

21 297 C. V. இராமகிருஷ்ணன், ஹிந்து ஹைஸ்கூல், மதுராந்தகம்.

22 199 R. ராஜகோபாலன், போர்டு ஹைஸ்கூல், தென்காசி.

23 219 A. சுப்பிரமணியன், ஸெண்ட் மிக்கேல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.

24 337 V. கிருஷ்ணசாமி, முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.

25 195 T.S. செல்லையா, St. Francis Xavier's College-ஹைஸ்கூல் பாளையங்கோட்டை.

26	276	T. V. ஸ்ரீநிவாஸாச்சாரி, கலவல ராமாநுஜ செட்டியார் ஹைஸ்கூல், புரசபாக்கம், சென்னை.
27	346	T. ஆனையப்பன், முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.
28	248	P. S. சாரங்கபாணி, ஹைஸ்கூல், உரத்தநாடு.
29	271	T. R. பார்த்தசாரதி, P. S. ஹைஸ்கூல், மயிலாப்பூர்.
30	275	R. கிருஷ்ணமூர்த்தி, கலவல ராமாநுஜ செட்டியார் ஹைஸ்கூல், புரசபாக்கம், சென்னை.
31	299	S. குருமூர்த்தி, விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
32	238	M. ஷண்முகசுந்தரம், மஹாராஜன ஹைஸ்கூல், ஈரோடு.
33	253	V. ரெங்கநாதன், ஹைஸ்கூல், உரத்தநாடு.
34	270	T. அப்பாத்துரை, P. S. ஹைஸ்கூல், மயிலாப்பூர்.
35	280	D. கிருஷ்ணமூர்த்தி, பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
36	349	S. V. ஸ்ரீராமன், A. A. M. ஹைஸ்கூல், திண்டிவனம்.
37	207	S. கிருஷ்ணமாச்சாரி, முனிசிபல் காலேஜ், சேலம்.
38	352	K. வாசுதேவன், A. A. M. ஹைஸ்கூல், திண்டிவனம்.
39	218	D. தேவதானம், ஸெண்ட் மிக்கேல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.
40	179	T. N. முத்துக்கிருஷ்ணன், போர்டு ஹைஸ்கூல், குளித்தலை.
41	293	N. கோதண்டராமன், ஹிந்து ஹைஸ்கூல், மதுராந்தகம்.
42	221	G. நாராயணசாமி, ஸர்வஜன ஹைஸ்கூல், பீளமேடு.
43	237	R. வெங்கடேசன், மஹாராஜன ஹைஸ்கூல், ஈரோடு.
44	231	T. R. யதுபதி, ஷை ஷை
45	290	P. V. ஆராவமுதாச்சாரி, ஹிந்து ஹைஸ்கூல், மதுராந்தகம்.
46	209	S. கிருஷ்ணமூர்த்தி, முனிசிபல் காலேஜ், சேலம்.
47	283	A. சோமசுந்தரம், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
48	303	புங்காருசாமிநாயுடு (செட்டி), D. M. H. ஸ்கூல், திருவண்ணாமலை.
49	187	K. V. பிரமநாயகம், C. M. ஹைஸ்கூல், திருநெல்வேலி.
50	189	S. இராமநாதன், C. M. ஹைஸ்கூல், ஷை
51	223	N. வெங்கிடசாமி, ஸர்வஜன ஹைஸ்கூல், பீளமேடு.

52	230	A. G. கிருஷ்ணன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
53	284	V. பாலகிருஷ்ணன் பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
54	243	A. சோமசுந்தரம், ஸெண்ட் ஜோஸப் செக்கண்டரி ஸ்கூல், கூடலூர்.
55	265	K. துரைசாமி, மிஸெனரி மிசியோன் கலாசாலை, ஆம்பூர்.
56	278	V. நரசிம்மன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
57	336	V. கணபதி, முனிசிபல் ஹைஸ்கூல். விழுப்புரம்.
58	204	K. ஷண்முகவடிவேலு, முனிசிபல் காலேஜ், சேலம்.
59	232	A. P. தங்கவேலு, மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
60	180	K. நரசிம்மன், போர்டு ஹைஸ்கூல், குளித்தலை.
61	202	S. ராமநாதன், முனிசிபல் காலேஜ், சேலம்.
62	212	S. விஸ்வநாதசெட்டி, முனிசிபல் காலேஜ், சேலம்.
63	191	K. S. கோபாலன், C. M. ஹைஸ்கூல், திருநெல்வேலி.
64	227	E. S. சாரங்கபாணி, மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
65	344	R. பூமிலிங்கம், முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.
66	348	D. கோவிந்தசாமி, ஷை ஷை
67	234	R. ஷண்முகசுந்தரம், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
68	289	R. சிவப்பிரகாசம், ஹிந்து ஹைஸ்கூல், மதுராந்தகம்.

M. Dinakara,
அக்கிராஸநாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

4—7—'29.